ISSN: 2582–5518




புதுகை
# வரலாறு நாளிதழ்
WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




வியாழன் ❖ நவம்பர். 16, 2023 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 42 ❖ ரூ.10

## தமிழ்நாடு அரசின் மூன்றாவது அரசு பல் மருத்துவக் கல்லூரி புதுக்கோட்டையில்

# திறப்பு

## ரூ.67.83 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையை தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்தார்





**புதுக்கோட்டை, நவ. 16–**

**தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நலவாழ்வுத் துறை சார்பில் 67.83 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு அரசின் மூன்றாவது அரசு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையான புதுக்கோட்டை அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் 8.89 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பொது சுகாதாரத்துறை கட்டடங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார்.**

70 ஆண்டுகளுக்கு பிறகு வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வாக, புதுக்கோட்டையில் 67 கோடியே 83 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாட்டின் மூன்றாவது அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையை தமிழ்நாடு முதல்வர் திறந்து வைத்தார். இக்கல்லூரியில் 2023-2024 ஆண்டிலிருந்து ஆண்டு தோறும் 50 மாணவர்கள் சேர்க்கைக்காக அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்த அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை 10.14 ஏக்கர் பரப்பளவில் மருத்துவமனை மற்றும் நிர்வாகக் கட்டடம், மாணவ மாணவியர் விடுதிக் கட்டடம், ஆசிரியர் மற்றும் முதல்வர் தங்கும் விடுதி போன்ற வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது. கூடுதலாக, பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு 5 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பிலான தேவையான அதிநவீன உபகரணங்கள் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி, இக்கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு தேவையான ஆசிரியர், நிர்வாகம், மற்றும் கல்விசாரா பணிகளுக்கு 148 பணியிடங்கள் தோற்றுவிக்கப் பட்டுள்ளது.

இப்புதிய புதுக்கோட்டை அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை இந்தியாவிலேயே மிகச் சிறந்த கட்டமைப்புகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், தமிழகத்தின் மத்திய பகுதியில் உள்ள ஏழை எளிய மக்களுக்கு தரமான பல் மருத்துவச் சிகிச்சை பெறுவதற்கு வழிவகை ஏற்படும். பொது சுகாதாரத்துறை சார்பில் கட்டப்பட்டுள்ள 27 புதிய கட்டடங்களை திறந்து வைத்தார்.

புதுக்கோட்டை மற்றும் அறந்தாங்கி சுகாதாரப் பகுதி மாவட்டங்களைச் சார்ந்த கீழாநிலை புதுப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் புறநோயாளிகள் பிரிவுக் கட்டடம், ராசநாயக்கன்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் புறநோயாளிகள் பிரிவுக் கட்டடம், பாலாண்டம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் புறநோயாளிகள் பிரிவுக் கட்டடம், நீர்பழனி துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், மலைக்குடிபட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் செவிலியர் குடியிருப்பு கட்டடம், பரம்பூர் துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், மேலமுத்துக்காடு துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், புலியூர் துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், நாகுடி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் புறநோயாளிகள் பிரிவுக் கட்டடம், ஏம்பாவயல் துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், கோட்டைப்பட்டிணம் துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், மணமேல்குடி துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், மும்பாலை துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், விச்சூர் துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், பி.ஆர். பட்டிணம் துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், நிலையூர் துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், கொத்தமங்கலம் கிழக்கு துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், கும்மங்குளம் துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், குப்பக்குடி துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், எல்.என். புரம் துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், விராலிப்பட்டி துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், வேங்கிடக்குளம் துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், முத்துப்பட்டிணத்தில் செவிலியர் குடியிருப்பு, கட்டுமாவடி துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், நெல்வேலி துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், அழியாநிலை துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், கருக்காக்குறிச்சி துணை சுகாதார நிலையத்திற்கான கட்டடம், என மொத்தம் 8.89 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பொது சுகாதாரத்துறை கட்டடங்களை தமிழ்நாடு முதல்வர் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் புதுக்கோட்டையிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக, சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ. வீ. மெய்யநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே. நவாஸ் கனி, எம்.எம். அப்துல்லா, சட்டமன்ற உறுப்பினர்கள் வி. முத்துராஜா, எம். சின்னதுரை, புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் மெர்சி ரம்யா, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் மரு. டி.எஸ். செல்வவிநாயகம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். தலைமைச் செயலகத்திலிருந்து, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு. ஜெ. சங்குமணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# என்.சங்கரய்யா உடலுக்கு அரசு மரியாதை தமிழக முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு



சென்னை, நவ. 16–

சுதந்திர போராட்ட வீரரும், கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மூத்த தலைவருமான என். சங்கரய்யா உடல் நலக்குறைவு காரணமாக நேற்று காலமானார். அவரது உடல் அரசு மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்படும் என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களாக சளி மற்றும் சுவாசிப்பதில் சிரமம் இருந்தால் சென்னை அப்போலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த கம்யூனிஸ்ட் மூத்த தலைவர் என். சங்கரய்யா நேற்று காலை காலமானார். அவரது உடலுக்கு முதல் ஆளாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்.

இந்தநிலையில், தமிழக முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில், ''பொதுத் தொண்டே வாழ்க்கையென வாழ்ந்த இச்செஞ்சட்டைச் செம்மலுக்கு மதுரை காமராசர் பல்கலைக்கழகம் மூலமாக மதிப்புறு முனைவர் பட்டம் வழங்க ஆவன செய்யப்படும் என இந்த ஆண்டு ஜூலை 15 அன்று நான் அறிவிப்பு செய்திருந்தும், தமிழ்நாட்டின் விடுதலைப் போராட்ட வரலாற்றை அறியாத குறுகிய மனம் படைத்த சிலரது சதியால் அது நடந்தேறாமல் போனதை எண்ணி இவ்வேளையில் மேலும் மனம் வருந்துகிறேன்.

விடுதலைப் போராட்ட வீரராக, சட்டமன்ற உறுப்பினராக, அரசியல் கட்சித் தலைவராக அவர் தமிழகத்திற்கு ஆற்றிய தொண்டினைப் போற்றும் விதமாக அவரது திருவுடல் அரசு மரியாதையுடன் பிரியாவிடை கொடுக்கப்படும்'' என குறிப்பிட்டுள்ளார்.

# டெல்லி தலைமைச் செயலாளரை உடனடியாக நீக்க துணை நிலை ஆளுநருக்கு முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால் பரிந்துரை



புதுடெல்லி, நவ. 16–

டெல்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால், அம்மாநில தலைமைச் செயலாளர் நரேஷ் குமாரை உடனடியாக பணிநீக்கம் செய்யும்படி, அமைச்சர் அதிஷி அளித்த விரிவான அறிக்கையை துணைநிலை ஆளுநர் வி.கே சக்சேனாவுக்கு அனுப்பிஉள்ளதாகதகவல் வெளியாகியுள்ளது.

டெல்லி தலைமைச் செயலாளர் நரேஷ் குமார் அவரது மகனுக்கு சொந்தமான நிறுவனத்துக்காக ரூ.850 கோடி அளவில் நிலமோசடி ஊழலில் ஈடுப்பட்டிருப்பதாக சேவைகள் மற்றும் விஜிலென்ஸ் துறை அமைச்சர் அதிஷி, விசாரணை அறிக்கை அளித்திருந்தார்.

மொத்தம் 670 பக்கங்கள் கொண்ட முதற்கட்ட விரிவான விசாரணை அறிக்கையில், துவாரகா விரைவுச்சாலை திட்டத்துக்காக பாம்னோலி கிராமத்தில் தேசிய நெடுஞ்சாலைத்துறை கையகப்படுத்திய துண்டு நிலத்தில் ஊழல் நடந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2015 ஆம் ஆண்டு நரேஷ் குமாரின் மகன் தொடர்புடைய நிறுவனம் அந்த நிலத்தை ரூ.75 லட்சத்துக்கு வாங்கியுள்ளது. பின்னர் விரைவு சாலைத் திட்டத்துக்காக நிலம் கையகப்படுத்தப்பட்ட போதுமிகஅதிகமானவிலை கொடுக்கப்பபட்டுள்ளது இதனால் அவர்களுக்கு ரூ.850 கோடி வரை லாபம் கிடைத்துள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

அதேபோல், தலைமைச் செயலாளர் தனது மகன் கரண் சவுகான் தொர்புடைய பல நிறுவனங்களுக்கு அரசு ஒப்பந்தங்களை வழங்கியதாகவும், விரைவு சாலைத் திட்டத்தின் மூலம் பயனடையும் நில உரிமையாளர்களுடன் கரண் சவுகானுக்கு வணிகத் தொடர்புகள் இருப்பதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்புடைய கோப்புகளை கோட்ட ஆணையர் அஸ்வின்குமார் தரமறுப்பது அவருக்கும் இந்த விவகாரத்தில் தொடர்பு இருக்குமோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்துவதாக குற்றம் சாட்டப் பட்டுள்ளது. இந்தத் தீவிரமான குற்றச்சாட்டுகள் காரணமாக தலைமைச் செயலாளர் நரேஷ் குமார் மற்றும் கோட்ட ஆணையர் அஸ்வின் குமார் இருவரையும் உடனடியாக பணி நீக்கம் செய்து இருவர் மீதும் வெளிப்படையான விசாரணை நடத்த வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குற்றஞ்சாட்டப் பட்டிருக்கும் ஊழலில் டெல்லியின் விஜிலென்ஸ் துறை, தலைமைச் செயலாளர் நரேஷ் குமார் உள்ளிட்டோர் நிலத்தின் மதிப்பினை குறைத்து மதிப்பிட்ட சதி அம்பலப்படுத்தப் பட்டுள்ளது. கையகப்படுத்தப்படும் நிலங்களுக்கான ஆரம்பக்கட்ட இழப்பீடு முதலில் ரூ.312 கோடி என மதிப்பிடப்பட்டது. பின்னர் இது கணிசமாக குறைவாக மதிப்பிடப்பட்டிருக்கும் என நம்பப்படுகிறது. இதன்மூலம் உண்மையில் வழங்கப்பட்ட இழப்பீடு மூலமாக பயனாளிகள் ரூ. 850 கோடி வரை ஆதாயமடைந்திருக்கலாம் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, டெல்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால் இந்த விவகாரம் தொடர்பான அறிக்கையை சிபிஐ மற்றும் அமலாக்கத்துறைக்கு அனுப்புமாறு அமைச்சர் அதிஷியிடம் கூறியதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

# சென்னையில் வேகமாக பரவும் புதிய வகை வைரஸ்கள் – பொதுமக்களுக்கு எச்சரிக்கை

சென்னை : நவ. 16,

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கி உள்ள நிலையில் தற்போது சளி, இருமல், காய்ச்சல் போன்றவை வேகமாக பரவி வருகிறது. தற்போது எச்1என்1 மற்றும் எச்3என்2 வைரஸ் பாதிப்புகள் அதிகமாக பரவி வருவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சென்னையை பொருத்தவரை மழைக்கால பருவத்தில் சளி, இருமல், காய்ச்சல் ஆகியவை பொதுவானதாக கருதப்பட்டாலும் தற்போது ஏற்படும் இருமல் நீண்ட நாட்கள் நீடிக்கிறது என்பது தான் அதிர்ச்சிகரமான தகவல். சென்னை மக்களுக்கு தற்போது இருமல் அதிகரித்து வருகிறது. அதிலும் பெரும்பாலானோருக்கு இந்த இருமல் ஒரு மாதம் வரை நீடிப்பதாக மருத்துவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சென்னையில் மருத்துவமனைகளுக்கு வரும் நோயாளிகளில் பலர் இருமல் நீண்ட காலம் நீடிப்பதாக கூறுகின்றனர். இந்த இருமல் ஒரு மாதம் வரை நீடிக்கிறது. இருமல் பாதிப்புடன் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளுக்கு தினமும் ஏராளமான நோயாளிகள் வருகிறார்கள். அவர்கள் அடிக்கடி வந்து இருமலுக்கு சிகிச்சை பெறுகிறார்கள்.

காய்ச்சல், சளி, தொண்டை வலி மற்றும் இருமல் போன்ற அறிகுறிகளை ஏற்படுத்தும் இன்புளூயன்சா வைரஸ் சுவாசக்குழாயை பாதிக்கிறது. மூச்சுத்திணறல், ஆஸ்துமா போன்ற ஒவ்வாமை பாதிப்புகள் கொண்டவர்களுக்கு இருமல் நீண்ட காலம் நீடிக்கிறது. மேலும் இருமல் கடுமையாகவும் இருக்கும். இதுபோன்ற நோயாளிகளுக்கு இருமல் 2 வாரம் முதல் ஒரு மாதம் வரை நீடிக்கலாம். ஒவ்வாமை பாதிப்புகள் இல்லாதவர்களுக்கு சளி, இருமல் போன்றவை சில நாட்களுக்கு மட்டுமே நீடிக்கும்.



இந்த பருவத்தில் இருமல் போன்ற பாதிப்புகளுடன் வரும் நோயாளிகளை நாங்கள் நீண்ட காலமாகவே பார்க்கிறோம். மேலும் சென்னையில் காய்ச்சல் பாதிப்புகளும் அதிகரித்து வருகிறது. காய்ச்சல் பாதிப்புகள் இன்னும் 2 அல்லது 3 மாதங்களுக்கு பொதுவானதுதான் என்றாலும், இப்போது பரவும் இருமல்தான் அதிக நாட்கள் நீடிக்கிறது. ஆனால் இதற்கான காரணம் முழுமையாக தெரியவில்லை. ஆனால் நோயாளிகளை பரிசோதனை செய்யும்போது வரும் முடிவுகள் பொதுவாக இன்புளூயன்சா வைரஸ் பாதிப்புகளாகவே உள்ளன.

கடந்த3வாரங்களாகவே இருமல் பாதிப்புடன் அதிக நோயாளிகள் மருத்துவமனைகளுக்கு வருகிறார்கள். இது பொதுவாகஏற்படக்கூடிய வைரஸ் தொற்றுதான். ஆனால் ஒவ்வொரு நோயாளிக்கும் அவர்களின் நோய் எதிர்ப்பு ஆற்றலை பொருத்து பாதிப்புகள் வேறுபடுகிறது. 15 சதவீதம் முதல் 20 சதவீதம் நோயாளிகளுக்கு இருமல் நீண்ட காலம் நீடிக்கிறது. இதனால் அவர்களுக்கு காய்ச்சல் பாதிப்புகளும் ஏற்படுகிறது.

இப்போது வைரஸ்களின் தன்மை மாறிக்கொண்டே இருக்கிறது. தற்போது எச்1என்1 மற்றும் எச்3என்2 வைரஸ் பாதிப்புகள் பரவி வருகிறது. இருமல் பாதிப்பு கொண்ட நோயாளிகள் அதிகமாக பேசக்கூடாது. எப்போதும் முக கவசம் அணிய வேண்டும். இதனால் வீடுகளில் உள்ளவர்களுக்கும், மற்றவர்களுக்கும் வைரஸ் வேகமாக பரவுவது தடுக்கப்படும். இதுபோன்ற பாதிப்பு கொண்ட நோயாளிகள் ஆக்சிஜன் அளவை அடிக்கடி கண்காணிக்க வேண்டும். மற்ற இணை நோய் பாதிப்புகள் கொண்டவர்கள் தங்களுக்கு காய்ச்சல், சோர்வு, தலைவலி, மூச்சுத்திணறல் மற்றும் அன்றாட செயல்பாடுகளில் பாதிப்பு இருந்தால் உடனடியாக டாக்டரை அணுக வேண்டும். அது மூச்சுக்குழாய் அழற்சியாக மாறினால் இருமல் நீண்ட நாட்கள் நீடிக்கும்.

ஒருவருக்கு நீண்ட காலமாக இருமல் இருந்தால் போதுமான அளவு ஓய்வு எடுக்க வேண்டும். நல்ல ஊட்டச்சத்து கொண்ட உணவை எடுத்துக்கொள்ள வேண்டும். தண்ணீரை சூடுபடுத்தி வெதுவெதுப்பாக குடிக்க வேண்டும். நன்றாக தூங்க வேண்டும். கடற்கரை பகுதிகள், குளிர்ந்த காற்று வீசும் பகுதிகள், தூசி நிறைந்த பகுதிகளுக்கு செல்வதை தவிர்க்க வேண்டும். அப்படி சென்றால் நிலைமை மிகவும் மோசமாகும். 2 அல்லது 3 வாரங்களுக்கு மேல் இருமல் நீடித்தால் சுயமாக மருந்து சாப்பிடக்கூடாது. மருத்துவரின் ஆலோசனையின்படி சிகிச்சை பெற வேண்டும் என மருத்துவர் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# கந்தர்வகோட்டை அருகே அரசு நடுநிலைப் பள்ளியில் குழந்தைகள் தின விழா கொண்டாட்டம்



கந்தர்வகோட்டை,நவ 16-

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியம் அக்கச்சிப்பட்டி நடுநிலைப் பள்ளியில் குழந்தைகள் தின விழா நடைப்பெற்றது . மாணவர்கள் நேரு முக கவசம் அணிந்து உற்சாகமாக கொண்டாடி மகிழ்ந்தனர். இந்நிகழ்வினை தலைமை ஆசிரியர் தமிழ்ச்செல்வி அனைவரையும் வரவேற்றார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட இல்லம் தேடிக் கல்வி மைய ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் ரகமதுல்லா குழந்தைகள் தினம் குறித்து பேசினார்.

இந்நிகழ்வில் மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றது, குழந்தைகள் தின விழாவை முன்னிட்டு நடைபெற்ற விளையாட்டு போட்டிகளில் வெற்றி மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கி பாராட்டப்பட்டது. இந்நிகழ்வில் ஆசிரியர்கள் மணிமேகலை,சிந்தியா, செல்விஜாய், தனலெட்சுமி கௌரி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர், நிறைவாக ஆசிரியை நிவின் நன்றி கூறினார்.

# இன்று முதல் சபரிமலைக்கு சிறப்பு பேருந்துகள் அரசு போக்குவரத்து கழகம் அறிவிப்பு

சென்னை : நவ. 16, கேரள மாநிலம் சபரிமலை ஐயப்பன் கோயில் மண்டல பூஜையை முன்னிட்டு இன்று முதல் சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என்று தமிழக அரசு போக்குவரத்து கழகம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

கேரளாவில் உள்ள உலகப்புகழ் பெற்ற சபரிமலை ஐயப்பன் கோவிலில் கார்த்திகை மாதத்தையொட்டி நேற்று மாலை கோயில் நடை திறக்கப்பட்டது. இந்த கோவிலுக்கு உலகம் முழுவதும் உள்ள ஐயப்ப பக்தர்கள், கார்த்திகை மாதம் மாலை அணிந்துசபரிமலைக்கு வந்து ஆசி பெறுவது வழக்கம். இதனால் சபரிமலையில் லட்சக்கணக்கான பக்தர்கள் கூடுவார்கள். தமிழ்நாட்டில் இருந்தும் பல ஆயிரம் பேர் சபரிமலைக்கு செல்வார்கள். இதையொட்டி, பக்தர்களின் வசதிக்காக தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் சிறப்பு பேருந்துகளை இயக்குவதாக அறிவித்துள்ளது. அதன்படி, தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் இருந்து சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளது.

இந்த பேருந்துகள், இன்று முதல் அடுத்தாண்டு ஜனவரி மாதம் 16-ந் தேதி வரை இயக்கப்பட உள்ளதாகவும், சென்னை, திருச்சி, மதுரை மற்றும் புதுச்சேரி/ கடலூர் ஆகிய இடங்களில் இருந்து பம்பைக்கு அதிநவீன சொகுசு பேருந்துகள், குளிர்சாதனமில்லா இருக்கை மற்றும் படுக்கை வசதி பேருந்துகள் இயக்கப்பட உள்ளது என போக்குவரத்து கழகம் அறிவித்து உள்ளது.

கார்த்திகை மாதம் திறக்கப்படும் அய்யப்பன் கோவில், டிசம்பர் மாதம் 27ந் தேதி (27.12.2023 முதல் 30.12.2023 மாலை 5 மணி வரை) கோயில் நடை சாத்தப்பட உள்ளதால், டிசம்பர் 26 முதல் டிசம்பர் 30-ம் தேதி வரை சிறப்பு பேருந்துகள் இயக்கப்படாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சிறப்பு பேருந்துகளை www.tnstc.in மற்றும் TN-STC Official App மூலமாக முன்பதிவு செய்யலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், பேருந்துகளின் விவரம் உள்ளிட்டபல்வேறுதகவல்களை பெறுவதற்கு 94450 14452, 94450 14424, 94450 14463 மற்றும் 94450 14416 ஆகிய செல்போன் எண்களும் உதவி எண்களாக அறிவிக்கப்பட்டுள்ளது. சிறப்பு பேருந்துகள்வசதிகள்மட்டுமின்றி பக்தர்களின் வசதிக்காக வாடகை அடிப்படையிலும் பேருந்துகள் விடப்படும் என்றும் அரசு அறிவித்துள்ளது.

கார்த்திகை மாதத்தில் தமிழ்நாட்டில் இருந்து சபரிமலைக்கு பக்தர்கள் மாலை அணிந்து விரதம் இருந்து கோயில்களுக்கு செல்லும் நிலையில், மகர விளக்கு பூஜை மற்றும் மண்டல பூஜையை காண வழக்கத்தை விட பன்மடங்கு செல்வார்கள். இதை கருத்தில் கொண்டு வழக்கமான பேருந்துகளுடன் சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகிறது.

# அன்னவாசல் வட்டார வளமையத்தில் ஆலோசனைக் குழு கூட்டம்



அன்னவாசல் ,நவ.16-

புதுக்கோட்டை மாவட்டம் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி திட்டம் அன்னவாசல் வட்டார வள மையத்தில் பணி சார்ந்த ஆலோசனைக் குழு கூட்டம் நடைபெற்றது. புதிதாக பொறுப்பேற்றுள்ள தொடக்கநிலை மாவட்ட உதவி திட்ட அலுவலர் கோவிந்தன் தலைமையில் நடைபெற்றது.

வட்டார வளமைய மேற்பார்வையாளர் ரோஸ்மேரி சகாயராணி வரவேற்றார். இல்லம் தேடி கல்வி மாவட்ட ஆசிரியர் ஒருங்கிணைப்பாளர் கலையரசன் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வீரப்பன் உதவித் திட்ட அலுவலரை அறிமுகம் செய்து வாழ்த்துரை வழங்கினார்.

தொடர்ந்து உதவி திட்ட அலுவலர் கோவிந்தன் பேசுகையில், புதிதாக பதவியேற்றுள்ளேன். பொதுவாக பணி சிறப்பாக நடைபெற அனைவரின் ஒத்துழைப்பும் அவசியம். ஊர் கூடி தேர் இழுத்தல் போன்று அனைவரும் ஒன்றிணைந்து செயல்படும் போது மட்டுமே இலக்கு சாத்தியமாகும். எனவே எல்லோரும் சுதந்திரமாகவும் முழு கடமை உணர்வோடும் தங்கள் பணியை ஒன்றிணைந்து செயல்படுத்துவோம் என்றார்.

மேலும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி திட்டக் கூறுகள் சார்ந்த வழிகாட்டுதல்களை வழங்கியதோடு மதிப்பீடுகள் பதிவேற்றம் பயிற்சி ஏடுகள் வழங்குதல் மாற்றுத்திறன் குழந்தைகளுக்கு சலுகைகளை பெற்றுத் தருதல் குறித்தும் ஆலோசனைகள் வழங்கினார். கூட்டத்தில் ஆசிரியர் பயிற்றுநர்கள் ரெத்தின சபாபதி, விஜயகுமார், மீனாட்சி, வைரமுத்து மற்றும் சிறப்பு பயிற்றுநர்கள் கலைச்செல்வி, சந்திரா, பாஸ்கர சேதுபதி மற்றும் கணக்காளர்கள் பழனிவேல்,விமலா,மலர்விழி இயன்முறை மருத்துவர் கோவிந்தசாமி, சாலைதவமணி ஆகியோர் கலந்து கொண்டனர். ஆசிரியர் பயிற்றுநர் செந்தில்குமார் நன்றி கூறினார்.






திருநெல்வேலி மாவட்டம் பணகுடி கிளை நூலகத்தில் 56-வது தேசிய நூலக வார விழாவினை முன்னிட்டு தளிர் வாசகர் வட்டம் மற்றும் நாகர்கோவில் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் இணைந்து நடத்தும் மாபெரும் புத்தகக் கண்காட்சியை தொடங்கி வைத்தார் திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் சா. ஞானதிரவியம், நயினார் நாகேந்திரன் திருநெல்வேலி சட்டமன்ற உறுப்பினர் முன்னிலை வகித்தார்,, மாவட்ட நூலக அலுவலர் மீனாட்சி சுந்தரம்,நிகழ்ச்சியை தொகுத்து வழங்கியவர் மு. சங்கர், மற்றும் நிகழ்ச்சியில் முத்துக்குமார், வார்டு உறுப்பினர் கோபி, ஜெயராம், உலகம்மாள், மனுவேல், பேரூராட்சி மன்றத் தலைவி தனலட்சுமி தமிழ்வாணன், துணைத் தலைவர் புஷ்பராஜ், ராசுக்குட்டி ,ஆரோக்கிய ராஜேஷ் அனைவரையும் வரவேற்று நன்றியுரை ஆற்றினார்.

# அரசுப் பள்ளி வளாகத்தில் மாணவன் மயங்கி விழுந்து உயிரிழப்பு : ஆசிரியர்கள் அதிர்ச்சி



அறந்தாங்கி : நவ. 16, புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அருகே அரசு உயர்நிலைப் பள்ளியில் பயின்று வந்த ஒன்பதாம் வகுப்பு மாணவன் பள்ளி வளாகத்தில் மயங்கி விழுந்து உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அருகே உள்ள மேல்மங்கலம் கிராமத்தைச் சேர்ந்தவர் சுப்பிரமணியன். கூலித் தொழிலாளியான இவருக்கு மாரிமுத்து (14) என்ற மகன் இருந்தார். இவர் அருகே உள்ள பெருங்காடு அரசு உயர்நிலைப் பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு படித்து வந்துள்ளார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை மாலை அப்பள்ளியில் நடைபெற்ற குழந்தைகள் தினவிழாவில் பங்கேற்று விட்டு வீட்டுக்குச் செல்வதற்காகப் பள்ளியின் மேல்மாடியில் உள்ள வகுப்பறைக்கு மாணவன் சென்றார். சிறிது நேரத்தில் பையை எடுத்துக் கொண்டு கீழே இறங்குவதற்காக ஓடிவந்த போது அந்த பள்ளிக் கட்டிடத்தில் உள்ள படிக்கட்டு அருகே மாணவன் மாரிமுத்து மயங்கி விழுந்து உள்ளார்.

இதனைப் பார்த்த சக மாணவர்கள் மாரிமுத்துவை எழுப்பியும் அவர் எழவில்லை எனக் கூறப்படுகிறது. இதனால், பயந்து போன மாணவர்கள் உடனடியாக இது குறித்து ஆசிரியர்களுக்கு தகவல் அளித்தனர். இதைக்கேட்டு பதற்றத்துடன் ஓடி வந்த ஆசிரியர்கள், மாணவனை உடனடியாக மீட்டு அறந்தாங்கி அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். ஆனால் அங்கு மாரிமுத்துவின் உடலை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கெனவே இறந்துவிட்டதாக தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் மாரிமுத்துவின் குடும்பத்தினர் மத்தியிலும், சக மாணவர்கள் மத்தியிலும் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. இதுகுறித்து தகவல் அறிந்த ஆவுடையார்கோவில் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். மாணவன் உயிரிழப்பில் சந்தேகம் இருப்பதாக அவரது பெற்றோர்கள் போலீஸாரிடம் முறையிட்டனர். இதையடுத்து. பள்ளியில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி காட்சிகளை ஆராய்ந்த போது, அதில் மாணவன் பையை எடுத்துக்கொண்டு வேகமாக ஓடி வருவதும். பள்ளி படிக்கட்டு முன்பாக மாணவனுக்கு மயக்கம் ஏற்பட்டு அவன் தடுமாறி கீழே விழுந்துள்ளார். அதையடுத்து, சக மாணவர்கள் அந்த மாணவனை எழுப்பும் காட்சிகளும் அதில் பதிவாகியிருந்தது. இதனை மாரிமுத்துவின் பெற்றோரிடம் காட்டிய பிறகு அவர்கள் சமாதானம் அடைந்தனர். இந்நிலையில், இந்த சம்பவம் குறித்துத் தொடர்ந்து போலீஸாரும் கல்வித் துறை அலுவலர்களும் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# புளியங்குடி நகரக் கழக அலுவலகத்தில் பாக முகவர்கள் கூட்டம்



தென்காசி,நவ.16-

தென்காசி மாவட்டம் புளியங்குடியில் திமுக நகரச் செயலாளர் எ.அந்தோணிசாமி தலைமையில் நாடாளுமன்றத் தேர்தல்பொறுப்பாளர் எஸ். பரமகுரு முன்னிலையில் புளியங்குடி நகர கழக அலுவலகத்தில் பி எல் ஏ டு கலந்தாலோசனை கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்குதலைமை செயற்குழு உறுப்பினரும் அவைத்தலைவருமான வேலுச்சாமி பாண்டியன், நகர்மன்றத் தலைவியும், மாவட்டத் தொண்டரணி அமைப்பாளருமான விஜயா சௌந்தர பாண்டியன், மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் பொண்ணுதுரைச்சி, மாவட்ட சிறுபான்மையினர் அணி அமைப்பாளர் நாகூர் கனி, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பிச்சையா, குகன், மாவட்ட பிரதிநிதி சுரேஷ், அய்யனார், மாவட்டசுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் ராஜராஜன், மருத்துவர் அணிதுணை அமைப்பாளர் குருராஜ், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் விஜயலட்சுமி மாரிக்கனி, தலைமை செயற்குழு உறுப்பினர் பத்ர சாகுல், கலை இலக்கிய அணி மீனாட்சிசுந்தரம், நகர்மன்ற உறுப்பினர்கள்ஸ்டீபன் ராஜேஸ்வரி, கவிதா மாரியப்பன், உமா மகேஸ்வரி, பாலசுப்ரமணியம், மகேஷ் கார்த்திகா, பாலசுப்பிரமணியம், வள்ளி அண்ணாமலை ,அருணாச்சலம்,நகரப் பொருளாளர் காஜாமைதீன், சிறுபான்மையினர் அணி சேக் மைதீன், ஓட்டுநர் அணி துணை அமைப்பாளர் அன்பு ராஜன், கலை இலக்கிய அணி மணிமாறன், தலைமைக் கழகப் பேச்சாளர் ஜப்பார், மீனவர் அணி துணை அமைப்பாளர் பீர் ஒலி, முகமது மீரான், அக்ரி சந்திரன், மாவட்ட விவசாய அணி சேதுராமன், பண்டாரம், பரமசிவம், இஸ்மாயில், முருகேசன் ஆசிரியர், மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் வி. ரமேஷ், நகர தொழில்நுட்ப அணி க. ஆனந்தராஜ், வெற்றிவேல் ஆகியோர் பாக முகவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.



தென்காசி வடக்கு மாவட்டம் சிவகிரியில் மாவட்டச் செயலாளர் ராஜா ஈஸ்வரன் எம்எல்ஏ வழிகாட்டுதலின்படி சிவகிரி பேரூர் கழகம் பூத் முகவர்கள்பிஎல்எடு ,பிஎல்சி பூத் கமிட்டி உறுப்பினர்கள் சந்தித்து விபரம் சேகரிப்பு படிவம் மற்றும் பாகமுகவருக்கான பதிவேடு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் சிவகிரி பேரூர் கழக பொறுப்பாளர் தலைமை செயற்குழு உறுப்பினர் யு.எஸ்.டி.சீனிவாசன், பேரூர் கழக செயலாளர், மாநில மருத்துவர் அணி இணைச் செயலாளர், மருத்துவர் செண்பக விநாயகம்பூத் கமிட்டி ஒருங்கிணைப்பாளர்கள் முத்துலட்சுமி,கிருஷ்ணலீலா, சேவுகபாண்டியன்,கார்த்திக்குமார், வீரமணி மற்றும் வார்டு செயலாளர்கள், பாகமுகவர்கள் பூத் கமிட்டி உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# தென்காசியில் தென் பொதிகை டிரஸ்ட் சார்பில் அன்னதானம்




*தென்காசி,நவ.16-*

*பசி போக்கும் தளம் இலஞ்சி தென்பொதிகை டிரஸ்ட், சார்பில் ஐப்பசி மாத அமாவாசையை முன்னிட்டு தென்காசி அரசு மருத்துவமனையில் வைத்து அன்னதானம் நடைபெற்றது, இந்த அன்னதானத்தில் கர்ப்பிணி தாய்மார்கள், வயோதிக முதியவர்கள், நோயாளிகள், கைக்குழந்தையுடன் வந்த தாய்மார்கள் என மொத்தம் சுமார் 700 பேர் கலந்து கொண்டனர்.*

*இந்த அமைப்பு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு துவங்கப்பட்டு தர்ம சிந்தனை உள்ள நல்லுள்ளங்களை ஒருங்கிணைத்து அதன் மூலம் பெறப்படும் நிதி உதவியில் தொடர் அன்னதானத்தை மேற்கொண்டு வருகிறது.கொரோனா கால கட்டத்திலும் தொடர் அன்னதானம் மேற்கொள்ளப்பட்டது, அது மட்டும் இல்லாமல் சில மாவட்டங்களில் ஆதரவற்ற முதியோர்கள், ஆதரவற்ற குழந்தைகள், மாற்றுதிறனாளிகள், கண் பார்வை குறைபாடுடைய, மனவளர்ச்சி குன்றிய ஆசிரமங்களிலும் தொடர் அன்னதானம் வழங்கி வருகின்றனர். இயன்றதை செய்வோம் இல்லாதவர்களுக்கு என்ற தாரக மந்திரத்துடன்*

*பசி பிணி போக்கும் தொடர் முயற்சியில் பசி போக்கும் தளம் இலஞ்சி தென்பொதிகை டிரஸ்ட், பணி நடைபெறுகிறது, இதன் கிளைகள் : ஏரல்,சேலம், திருண்ணாமலை மற்றும் சென்னையிலும் செயல்பட்டு வருகிறது.*

# அதிமுக பெயர், கொடியை பயன்படுத்தலாமா ஓபிஎஸ் வழக்கு இன்று விசாரணை



சென்னை:நவ. 16, அதிமுக பெயர், கொடி, சின்னம், லெட்டர் பேட் ஆகியவற்றை பயன்படுத்த விதிக்கப்பட்ட இடைக்காலத் தடையை எதிர்த்து ஓபிஎஸ் தொடர்ந்த வழக்கு இன்று முதல் வழக்காக விசாரிக்கப்படும் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்து உள்ளது.

அதிமுகவில் ஒற்றை தலைமையை கொண்டு வந்த தீர்மானத்திற்கும், ஓ.பன்னீர்செல்வம் உள்பட 4 பேரை நீக்கிய தீர்மானத்துக்கும் தடை விதிக்க சென்னை உயர்நீதிமன்றம் மறுத்த நிலையில், அதிமுக கட்சி, சின்னம் ஆகியவற்றை பன்னீர்செல்வம் தரப்பினர் தொடர்ந்து பயன்படுத்த தடை விதிக்கக் கோரி கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார். அதிமுக பொதுச்செயலாளராக தன்னை தேர்தல் ஆணையமும், உயர் நீதிமன்றமும் அங்கீகரித்துள்ள நிலையில், பன்னீர்செல்வம் ஒருங்கிணைப்பாளர் என தொடர்ந்து கூறிவருவதாகவும், இது தொண்டர்களிடையே குழப்பத்தை விளைவிப்பதாகவும் மனுவில் குறிப்பிட்டு உள்ளார்.

இந்த மனு நீதிபதி என். சதீஷ்குமார் முன்பு கடந்த முறை விசாரணைக்கு வந்தபோது, பன்னீர் செல்வம் தரப்பில் பதில் மனு தாக்கல் செய்ய அவகாசம் கேட்கப்பட்டது. இந்த வழக்கு கடந்த 7 ம் தேதி மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது இபிஎஸ் தரப்பில் மூத்த வழக்கறிஞர் விஜய் நாராயண் ஆஜராகி, இந்த வழக்கு 3 வது முறையாக விசாரணைக்கு வருகிறது. இதுவரை பதில் மனுதாக்கல் செய்யவில்லை, தன்னை பொதுச் செயலாளராக தேர்ந்தெடுத்தது செல்லும் என்ற உயர் நீதிமன்ற உத்தரவை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளதாக கூறி அவகாசம் வாங்கினார்கள், ஆனால் அதில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என வாதிட்டார்.

ஓபிஎஸ் தரப்பில் வழக்கறிஞர் ராஜலட்சுமி ஆஜராகி, உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு நம்பர் ஆகிவிட்டது, இந்த வழக்கில் பதில் மனு தாக்கல் செய்ய உள்ளோம், குறுகிய கால அவகாசம் வழங்க வேண்டும் என கோரிக்கை வைத்தார். அப்போது நீதிபதி சதீஷ்குமார், எத்தனை முறை இந்த விவகாரத்தில் இப்படி வழக்கு தொடர்வீர்கள்? நேரம் கேட்பீர்கள்? எத்தனை முறை ஒரே வாதத்தை வைப்பீர்கள்? என கேள்வி எழுப்பினார்.

"நான்கைந்து மாதங்களில் முக்கியமான எம்.பி தேர்தல் வரவுள்ளது, ஆனால் கட்சியிலிருந்து நீக்கப்பட்டு ஒன்றரை ஆண்டுகளாக அதே பதவியை பயன்படுத்துகிறார். எங்களை கட்சியிலிருந்து நீக்கி அறிவிக்கிறார். பொதுமக்கள் மற்றும் கட்சியில் குழப்பம் ஏற்படுத்தி கொண்டிருக்கிறார்." என இபிஎஸ் தரப்பில் வாதிடப்பட்டது. வாதங்களை கேட்ட நீதிபதி, பொது செயலாளர் தேர்தல் செல்லும் என்கிற சென்னை உயர் நீதிமன்ற உத்தரவிற்கு உச்சநீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு ஏதும் பிறப்பிக்கவில்லை என்பதால், அதிமுக பெயர், கொடி, சின்னம், லெட்டர் பேட் ஆகியவற்றை பயன்படுத்த கட்சியிலிருந்து நீக்கப்பட்ட ஒ.பன்னீர்செல்வத்திற்கு இடைக்காலத் தடை விதித்து உத்தரவிட்டார்

இதனை எதிர்த்து ஓபிஎஸ் தரப்பு மேல்முறையீடு செய்தது. நீதிபதிகள் ஆர். மகாதேவன் - முஹம்மது ஷபீக் அமர்வு கடந்த 8ம் தேதி இந்த வழக்கை விசாரணைக்கு ஏற்பதாக தெரிவித்தனர். அறிவிக்கப்பட்டபடி வெள்ளிக்கிழமை இந்த வழக்கு விசாரணைக்கு பட்டியலிடப்படவில்லை. இது தொடர்பாக ஓபிஎஸ் தரப்பு வழக்கறிஞர் நீதிபதிகளிடம் முறையிட்டதை தொடர்ந்து நேற்று விசாரணைக்கு எடுக்கப்படும் என்று தெரிவித்தனர்.

அதன்படி இந்த மேல் முறையீட்டு வழக்கு, நீதிபதிகள் மகாதேவன் மற்றும் முகமது சபீக் அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, தனி நீதிபதி உத்தரவின் சான்றளிக்கப்பட்ட நகல் இல்லாமல் மனுவைபட்டியலிட உத்தரவிட்ட நீதிபதிகள், இன்று முதல் வழக்காக இந்த மேல்முறையீட்டு மனு விசாரிக்கப்படும் என தெரிவித்தனர்.

மஞ்சங்காரணையில் நடைபெற்ற

# மாபெரும் ஒரு நாள் இருவர் கேரம் போர்டு விளையாட்டு போட்டியை டி.ஜே.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ துவக்கி வைத்தார்





ஊத்துக்கோட்டை, நவ16–

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம்,எல்லாபுரம் தெற்கு ஒன்றிய திமுக சார்பில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாபெரும் ஒரு நாள் இருவர் தள்ளாட்டப்போட்டி எனப்படும் கேரம் போர்டு விளையாட்டு போட்டி நடைபெற்றது. திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், மஞ்சங்காரணையில் உள்ள சமுதாய கூட வளாகத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் 40 அணிகள் பங்கேற்று விளையாடியது.இதில்,முதல் பரிசை புழல் அணி பெற்று ரூ.10 ஆயிரம் ரொக்க பரிசை பெற்றது.2-ம் பரிசை கன்னிகைப்பேர் அணி பெற்று ரூ.7 ஆயிரம் ரொக்க பரிசை பெற்றது.இந்நிகழ்ச்சிக்கு, எல்லாபுரம் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் ஆ.சத்தியவேலு தலைமை தாங்கினார்.தொழிலாளர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் ஏ.சுரேஷ் அனைவரையும் வரவேற்றார்.தலைமைச் செயற்குழு உறுப்பினர் பி.ஜே.மூர்த்தி,மாநில அயலக அணி துணைச் செயலாளர் கன்னிகை ஜி.ஸ்டாலின், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.வி. லோகேஷ்,மாவட்ட பிரதிநிதி கே.வி.வெங்கடாஜலம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இப்போட்டியை கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினரும்,திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளருமான டி.ஜே.கோவிந்தராஜன் துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியை,மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.ராஜேஷ், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஜே.வீரமணிகண்டன்,மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் ஆர்.கே.தினகரன்,ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் சி.விஜய்,மாவட்டத் துணை அமைப்பாளர் எஸ்.பிரேம்ராஜ், சி.மணிவாசகம் ஆகியோர் ஒருங்கிணைத்து சிறப்பாக செய்தனர்.

இந்நிகழ்ச்சியில், ஒன்றிய நிர்வாகிகள் ஏ.தேவேந்திரன்,டி.கே.முனிவேல், ஆர். உதயசூரியன்,ஈ.உதயசூரியன், பி.ராஜேஸ்வரிபாஸ்கரன், கே.எஸ்.குப்பன், ஆர். தணிகாசலம், கே. கண்ணபிரான், சி.தினேஷ்குமார், திருக்கண்டலம் ஊராட்சிமன்ற தலைவர் எம்.மதன், ஷாம்கமலேஷ், முரளி, கோபி, பி.சத்யா, மாவட்ட நிர்வாகிகள் எம். துளசிராமன்,டி.பாபு, அக்கரை ஆர்.ரஞ்சித், கே.நாராயணன், ஜி.தியாகராஜன், எம். முனிநாதன்,எம்.கே.ஆனந்தன், நீதி என்ற செல்வகுமார், ஊத்துக்கோட்டை பேரூராட்சி மன்ற உறுப்பினர் கோல்ட் மணிகண்டன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளைக்கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். முடிவில், பி.ஜெயசீமன், கே.நாகராஜ், பி.ரஜினி, வி.பிரேம், து.அறிவழகன் ஆகியோர் நன்றி கூறினர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கன்னிகைப்பேர் இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.அன்பு சிறப்பாக செய்திருந்தார்.



▶ தீபாவளி திருநாளை முன்னிட்டு, அதிமுக பொதுச்செயலாளரும், முன்னாள் முதலமைச்சரும், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிச்சாமியை சேலத்தில் உள்ள அவருடைய இல்லத்தில், அதிமுக அமைப்பு செயலாளர் இராயபுரம் ஆர்.மனோ நேரில் சந்தித்து சால்வை அணிவித்து, பூங்கொத்து வழங்கி வாழ்த்துப்பெற்றார்.



▶ தொடர்ந்து பெய்து வரும் கனமழையினால் காரைக்கால் கோட்டுச்சேரி கொம்யூன் தென்கரை கிராம பகுதியில் குடியிருக்கும் வீட்டைச் சுற்றி மழை நீர் தேங்கியிருப்பதாக தெரிவிக்கப்பட்ட புகாரை தொடர்ந்து நெடுங்காடு கோட்டுச்சேரி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் முன்னாள் அமைச்சர் சந்திர பிரியங்கா நேற்று நேரில் சென்று பார்வையிட்டு கொம்யூன் பஞ்சாயத்து ஆணையரிடம் உடனடியாக மழை நீர் வடிவதற்கான பணிகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.



▶ திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி ஒன்றியம், பன்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த மறைந்த மிசா.கும்மிடிப்பூண்டி கி.வேணு இல்லத்திற்கு தமிழகத் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகதுறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா வந்தார். கி.வேணுவின் மகனும்,கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றிய கழகச் செயலாளருமான கி.வே.ஆனந்தகுமாருக்கு ஆறுதல் கூறினார்.பின்னர், மிசா.கும்மிடிப்பூண்டி கி.வேணுவின் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.

# விவசாயிகள் மகிழ்ச்சி வீராணம் ஏரியில் நீர்மட்டம் 43.85 அடியாக உயர்வு கீழணையில் இருந்து நீர்வரத்து அதிகரிப்பு



காட்டுமன்னார் கோவில்,நவ,16

கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோயில் அருகே கீழணையில் இருந்து நீர் வரத்து அதிகரித்து வருவ தால் வீராணம் ஏரியின் நீர் மட்டம் 43.85 அடியாக உயர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

காட்டுமன்னார் கோவில் அடுத்த லால்பேட்டையில் உள்ளது வீராணம் ஏரி. இதன் மொத்த நீர்மட்டம் 47.50 யாகும். கடலூர் மாவட்டத்தில் மிகப்பெரிய நீர் ஆதாரமாக விளங்கிவரும் இந்த ஏரிக்கு சாதாரண காலங்களில் வடவாறு வழியாகவும், மழைக்காலங்களில் கன அடி தண்ணீரும் அனுப்ணம் ஏரியின் நீர் பிடிப்புபகு பப்பட்டது. திகளில் பெய்கின்ற மழைநீர் செங்கால் ஓடை, கருவாட்டு ஓடை, வெண்ணங்குழி ஓடை வழியாக மழை தண்ணீர் வரும்.

இதன் மூலம் 44 ஆயிரத்து 856 ஏக்கர் விளைநிலங்கள் பாசன வசதி பெறுகிறது. மேலும் சென்னை மக்களின் குடிநீர் தேவைக்காக ஏரியில்இருந்து வினாடிக்கு 76 கன அடி தண்ணீர் அனுப்பபப்படுகிறது. மொத்த நீர்மட்டத்தை எட்டியது இதற்கிடையே மேட்டூர் அணையில் இருந்து கடந்த ஜூன் 12-ந் தேதி தண்ணீர் திறக்கப்பட்டதை அடுத்து கீழணையில் இருந்து வடவாறு வழியாக ஏரிக்கு 2 ஆயி ரம் கன அடி வரை தண்ணீர் திறக்கப்பட்டதை அடுத்து கடந்த ஆகஸ்டு 20-ந் தேதி வீராணம் ஏரி மொத்த நீர் மட்டமான 47.50 அடியை எட்டியது.

தொடர்ந்து பாசனத்துக்காக ஏரியில் இருந்து 34 மதகு கள் வழியாக தண்ணீர் திறந்து விடப்பட்ட நிலையில் கீழணையில் இருந்து வீரா ணம் ஏரிக்கு தண்ணீர் அனுப் புவது நிறுத்தி வைக்கப்பட்ட அடி தால் வீராணம் ஏரியின் நீர் மட்டம் 40.45 அடியாக குறைந் தது. தொடர்ந்து பாசனத்துக் காக வினாடிக்கு 100 கன அடி தண்ணீரும், சென்னை மக்க ளின் குடிநீர் தேவைக்காக 42

மீண்டும் குறைந்தது

பின்னர் 17 நாட்களுக்கு பிறகு மீண்டும் கீழணையில் இருந்து வடவாறு வழியாக வீராணம் ஏரிக்கு தண்ணீர் அனுப்பிவைக்கப்பட்டது. இருப்பினும் குறைந்த நாட்களே அந்த தண்ணீர் அனுப் பப்பட்டதால் வீராணம் ஏரியின் நீர் மட்டம் சற்று உயர்ந்து 42 அடியாக இருந்த நிலையில் பாசனத்துக்கும், சென்னை குடிநீருக்கும் தண்ணீர் அனுப் பப்பட்டதால் வீராணம் ஏரி யின் நீர்மட்டம் மீண்டும் 41.75 அடியாக குறைந்தது.

தொடர்ந்து கீழணையில் இருந்து நீர் வரத்து முற்றிலும் நிறுத்தப்பட்டது. இதனால் பருவமழைபெய்தால்தான் வீராணம் ஏரி மீண்டும் முழு கொள்ளளவை எட்டும்நிலை உருவானது.




▶ "அவசரகால வழியின் அவசியம் என்ன என்பது புரியாத அதிகாரிகள்." சென்னை விமான நிலையத்தில் உள்நாட்டு முனையத்தில் உள்ளே உள்ள அவசரகால வழியின் கதவை இப்படி சங்கிலி போட்டு பூட்டி அதன் மேல் ஒரு ஸ்டிக்கரில் எமர்ஜன்சி நேரத்தில் இந்த கதவு திறக்க வேண்டும் என்றால் மேலே உள்ள எண்ணுக்கு போன் மூலம் தொடர்பு கொள்ளவும் என ஸ்டிக்கர் ஒட்டி உள்ளனர். அவசரக்கால வழியினை அவசரத்திற்கு திறப்போம் என்று எழுதாமல்,இப்படி எழுதி இருப்பது பயணிகளிடம் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது, ஆனால் இதை பார்க்கும் போது பயணிகள் அவசர கால சமயத்தில் உயிரை காத்துக்கொள்ள ஓடுவார்களா? அல்லது பதட்டத்தில் நின்று இந்த கதவை திறக்க வேண்டும் என்று போன் செய்து பேசுவார்களா? என்பது விமான நிலைய அதிகாரிகளுக்கே வெளிச்சம்,சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதை உடனே சரி செய்யும் படி பயணிகள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

கொள்ளிடம் பகுதியில் கனமழையால் 10 ஆயிரம் ஏக்கர் சம்பா விளைநிலங்களில்

# தேங்கி நிற்கும் மழைநீரால் பாதிப்பு உரிய நிவாரணம் வழங்க விவசாயிகள் கோரிக்கை



கொள்ளிடம், நவ,16

பயிர் காப்பீடு தேதியை நவம்பர் 30 வரை நீட்டிக்க அரசுக்கு கோரிக்கை வடகிழக்கு பருவமழை கடந்த 13 ம் தேதி தொடங்கி தொடர் மழை பெய்து வரும் நிலையில் மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே கொள்ளிடம் சுற்றுவட்டார பகுதியான நல்லூர், ஆரப்பள்ளம், பழையபாளையம் ஆகிய பகுதிகளில் சுமார் பத்தாயிரம் ஏக்கரில் நேரடி விதைப்பு மூலம் சாகுபடி செய்யப்பட்டுள்ள சம்பா நெற்பயிர்கள் 30 நாட்களே ஆன நிலையில் மழைநீரில் மூழ்கியுள்ளது.

நல்லூர் மட்டுமின்றி ஆரப்பள்ளம், காட்டூர், கோதண்டபுரம் அளக்குடி, முதலைமேடு உள்ளிட்ட 10 கிராமத்திலும் விளைநிலங்களில் தண்ணீர் சூழ்ந்து வெள்ளக்காடகா காட்சியளிக்கிறது.

மேலும் பயிர்கள் முற்றிலும் மூன்று நாட்களாக தண்ணீரில் மூழ்கி கிடப்பதால் அழுகும் நிலை இருப்பதாகவும், தமிழக அரசு உரிய கணக்கெடுப்பு செய்து நிவாரணம் வழங்க கோரிக்கை விடுத்துள்ளனர்.

பயிர் காப்பீடு செய்யும் தேதி நேற்றுடன் முடிவதால் இன்னும் 30 சதம் விவசாயிகள் மழையால் சான்றிதழ் பெற முடியாமல் தவிப்பதால் காப்பீடு தேதியை நவம்பர் 30 தேதி வரை நீட்டிக்கவும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தொடந்து மழை மூன்று நாட்களாக தொடர்வதால் வீடுகளில் மக்கள் முடங்கி இருப்பதால் கூலி தொழிலாளர்கள் வேலை இழந்து வாழ்வாதாரம் பாதித்துள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

தேசிய ஆயுர்வேதா தினத்தை முன்னிட்டு

# வங்கனூர் அரசினர் மேல்நிலைப்பள்ளி மாணவர்களின் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது





ஊத்துக்கோட்டை,நவ16–


திருவள்ளூர் மாவட்டம், ஆர்.கே.பேட்டை ஒன்றியம்,வங்கனூர் அரசினர் ஆரம்ப சுகாதார நிலையத்தின் சார்பில் தேசிய ஆயுர்வேதா தினத்தை முன்னிட்டு ஸ்ரீ தன்வந்திரி ஜெயந்தி விழா நடைபெற்றது.

இதை முன்னிட்டு வங்கனூர் அரசினர் ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் ஆயுர்வேதாசிகிச்சை முறைகள் குறித்தும், நோயாளிகளுக்கு பக்க விளைவுகள் ஏற்படாமல் நோய்கள் குணமாகும் என்பதை எடுத்துக் கூறும் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு,வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் தமிழ்ச்செல்வன் தலைமை தாங்கினார். டாக்டர்கள் ஜி.மனோன்மணி, காஞ்சனா ஆகியோர் முன்னிலைவகித்தனர். இதன் பின்னர், வங்கனூர் அரசினர் மேல்நிலைப்பள்ளி மாணவர்களின் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. இதில், பள்ளியின் தலைமை ஆசிரியர் மணிமேகலை தலைமையில் மாணவர்கள் தேசிய ஆயுர்வேதா தினத்தை கொண்டாடுவதன் நோக்கம் குறித்தும், ஆயுர்வேதா மருத்துவத்தால் ஏற்படும் நன்மைகள் குறித்தும் விளக்கி கூறும் வகையில் பதாகைகளை ஏந்திய வண்ணம் முக்கிய வீதிகளின் வழியாக ஊர்வலமாக சென்று மீண்டும் பள்ளி வளாகத்தை அடைந்தனர். இந்நிகழ்ச்சிகளில்,சுமார் 200-க்கும் மேற்பட்டோருக்கு ஆயுர்வேதா சிகிச்சை, ஆலோசனை மற்றும் இலவச மருந்து வழங்கப்பட்டது.

சீர்காழி சுற்றுவட்டார பகுதிகளில் பெய்து வரும் தொடர் கனமழை

# 50 ஏக்கருக்கும் மேற்பட்ட விளைநிலங்கள் மழை நீரில் மூழ்கியது: விவசாயிகள் வேதனை





சீர்காழி,நவ,15

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே தேனூர் கதவணையில் இருந்து பிரியும் முடவன் வாய்க்கால் உட்பிரிவுகளான மருவத்தூர் வாய்க்கால், கோமணாண்டி வாய்க்காலில் இருந்து பாசன வசதி பெறக்கூடிய புங்கனூர், மல்லுக்குடி, மருவத்தூர், வைத்தீஸ்வரன்கோயில், எடக்குடி வடபாதி உள்ளிட்ட கிராமங்களில் 1,000 ஏக்கருக்கு மேல் பாசன வசதி பெறுகிறது.

இந்தாண்டு வாய்க்காலில் தண்ணீர் வராததால் மின் மோட்டார் முலம் நடவு பணியும் நேரடி நெல் விதைப்பின் மூலம் சாகுபடியும் செய்து வருகின்றனர். காலதாமதமாகவே விவசாய பணிகளை செய்த விவசாயிகளுக்கு தற்போது இளம் பயிர்களாக உள்ள 50 க்கும் மேற்பட்ட ஏக்கர் விளை நிலங்கள் நள்ளிரவு முதல் பெய்து வரும் கனமழையின் காரணமாக வயல் முழுவதும் மழை நீர் தேங்கி உள்ளது.

சம்பா இளம் பயிர்கள் ஒருநாள் மழைக்கே நீரில் மூழ்கியுள்ளது. தொடர்ந்து கனமழை பெய்யும் என இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்த நிலையில் மழைநீர் வடியாமல் தொடர்ந்து மழை பெய்தால் சம்பா பயிர்கள் அழுகும் நிலை ஏற்படும் நிலையில் உள்ளது,

மருவத்தூர் வாய்க்கால், கோமணான்டி வாய்க்கால்களில் மண்டியுள்ள ஆகாய தாமரை செடியால் தண்ணீர் விரைந்து வடிவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதால் வயல்களில் மழை நீர் தேங்கி பயிர்கள் பாதிக்கும் சூழல் உள்ளது.

# அருள்மிகு ஸ்ரீ தவ முனீஸ்வரர் ஆலய மகா கும்பாபிஷேக விழா



சென்னை ,நவ,16

சென்னை, ஆவடி திண் ஊர்தி தொழிலக குடியிருப்பு (பாரத் ஸ்டேட் வங்கி அருகில்) பகுதியில் கோவில் கொண்டிருக்கும் அருள்மிகு ஸ்ரீ தவ முனீஸ்வரர் ஆலய மகா கும்பாபிஷேக விழா நிகழும் சோபகிருது வருடம், துவாதசி திதி, அஸ்த நட்சத்திரம் கூடிய சுப தினத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

கும்பாபிஷேக விழாவினை முன்னிட்டு, நடராஜர், சிவகாமி அம்மன், மாணிக்கவாசகர், வராகி அம்மன், ஸ்ரீ மாதவ பெருமாள், ஸ்ரீதேவி பூதேவி, அன்னபூரணி ஆகிய உற்சவ மூர்த்திகள் பிரதிஷ்டை செய்யப்பட்டு கும்பாபிஷேக விழா நடைபெற்றது.

கும்பாபிஷேக விழாவினை தொடர்ந்து, வாழை பூஜை, கன்னியா பூஜை, சுமங்கலி பூஜை, உமாமகேஸ்வரி பூஜை ஆகிய நிகழ்ச்சிகளும் அதனை அடுத்து மகா தீபாராதனை, பிரசாதம் விநியோகம் ஆகிய நிகழ்ச்சிகளும் அதன் தொடர்ச்சியாக சிறப்பு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது.

விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஆலய தலைவர் எஸ்.கதிர்வேல், துணைச் செயலாளர் கே.பாலசுப்பிரமணியன், பொருளாளர் வி.சேகர் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

# சீர்காழி அருகே வயலில் தேங்கிய மழை நீரை வெளியேற்றும் பணியில் ஈடுபட்ட விவசாய கூலித் தொழிலாளி தவறி விழுந்து உயிரிழப்பு



சீர்காழி,நவ,16

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அடுத்த காத்திருப்பு கிராமத்தைச் சேர்ந்த விவசாய கூலி தொழிலாளி கனகராஜ். இவர் அதே பகுதியில் உள்ள கதிர் விஸ்வலிங்கம் என்பவருக்கு சொந்தமான 20 ஏக்கர் விலை நிலத்தில் விவசாய கூலி வேலை செய்து வருகிறார்.

இரண்டு நாட்களாக மழை பெய்த நிலையில் வயலில் தேங்கிய மழை நீரை வெளியேற்றுவதற்காக வரப்புகளை வெட்டி அகற்றும் பணியை கனகராஜ் மேற்கொண்டுள்ளார். அப்பொழுது மழையின் காரணமாகவும் சேற்றில் சிக்கியதாகும் தவறி வயலில் தேங்கிய தண்ணீரில் விழுந்துள்ளார்.

சேற்றில் சிக்கியதால் மீண்டு எழ முடியாமல் தண்ணீரில் மூச்சு திணறி அங்கேயே உயிரிழந்தார். அவ்வழியாக சென்ற கிராமவாசி ஒருவர் கனகராஜை மீட்டு மருத்துவமனையில் சேர்த்தர். அங்கு அவரை பரிசோதித்ததில் அவர் இறந்தது தெரியவந்தது. இதனையடுத்து சம்பவம் குறித்து பாகசாலை காவல் நிலையத்துக்கு குடும்பத்தினர் தகவல் கொடுத்தனர்.

தகவல் அறிந்து வந்த போலீசார் இறந்த கனகராஜின் உடலை மீட்டு உடற்கூறாய்வுக்காக சீர்காழி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் கனகராஜ் இறப்பு குறித்து வழக்கு பதிந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். விவசாய கூலி தொழிலாளியான கனகராஜ் இறந்த சம்பவம் காத்திருப்பு கிராமத்தில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# சென்னைக்கு குடிநீர் வழங்கும் ஏரிகள், தற்போது பெய்து வரும் பலத்த மழையால் ஏரிகள் வேகமாக நிரம்பி வருகின்றன



செம்பரம்பாக்கம்,நவ,16

செம்பரம்பாக்கம் உள்பட 5 ஏரிகளில் 74.9% நீர் இருப்பு உள்ளது. 5 முக்கிய ஏரிகளின் மொத்த கொள்ளளவான 11.757 டிஎம்சியில், தற்போது 8.806 டிஎம்சி நீர் இருப்பு உள்ளது. *செம்பரம்பாக்கம் 85.87%, *புழல் 83.18%, *பூண்டி 57.63%, *சோழவரம் 58.83%, *கண்ணன்கோட்டை 86.6%, நீர்வரத்து அதிகரிப்பால் செம்பரம்பாக்கம் ஏரியின் மொத்த கொள்ளளவான 24 அடியில் 22 அடியை நீர்மட்டம் தாண்டியது.

செம்பரம்பாக்கம் ஏரிக்கு நீர்வரத்து வினாடிக்கு 278 கன அடியில் இருந்து 440 கன அடியாக அதிகரித்துள்ளது.நீர்வரத்து அதிகரித்துள்ளதால் செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து கூடுதல் தண்ணீர் திறக்கப்பட உள்ளது.3,645 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட செம்பரம்பாக்கம் ஏரியில் 3,130 மில்லியன் கன அடி நீர் இருப்பு உள்ளது. செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து 25 கன அடி உபரி நீர் திறக்கப்பட்டு வருகிறது.

தொடர் மழையால் புழல் ஏரிக்கு நீர்வரத்து வினாடிக்கு 62 கன அடியில் இருந்து 606 கன அடியாக உயர்ந்துள்ளது.3,300 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட புழல் ஏரியில் 2,745 மில்லியன் கன அடி நீர் இருப்பு உள்ளது. புழல் ஏரியில் இருந்து சென்னை குடிநீர் தேவைக்காக 159 கன அடி நீர் திறக்கப்பட்டு வருகிறது.

இதனிடையே காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் 99 ஏரிகள் முழு கொள்ளளவை எட்டி உள்ளன. பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ள 909 ஏரிகளில் 99 ஏரிகள் முழு கொள்ளளவு எட்டி உள்ளன. மேலும் 149 ஏரிகளில் 75%க்கும் மேல் தண்ணீர் இருப்பு உள்ளது. தொடர் மழை காரணமாக நேற்று சென்னை, திருவள்ளூர் மாவட்டத்தில் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. புதுச்சேரி மற்றும் காரைக்காலில் அனைத்து பள்ளி, கல்லூரிகளுக்கும் நேற்று விடுமுறை விடப்பட்டுள்ளது.

# கடலில் மாயமான இரு சிறுவர்கள் உடல் சென்னை துறைமுகத்தில் கரை ஒதுங்கியது





சென்னை ,நவ,16

சென்னை காசிமேடு கடற்கரையில் நேற்று முன்தினம் கடலில் குதித்து கொண்டு இருந்த இரு சிறுவர்கள் தருண், சாமுவேல் கடல் அலையில் சிக்கி மாயமாகினர் இரண்டு நாட்களாக தீயணைப்புத் துறையினர் தேடியும் உடல் கிடைக்காததால் நேற்று காலை சென்னை துறைமுகத்தில் தருன் உடல் கரை ஒதுங்கியது.

தருன் உடலை காசிமேடு மீன்பிடி துறைமுகம் போலீசார் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மாயமான மற்றொரு சிறுவன் சாமுவேலை சென்னை துறைமுகம் நுழைவு வாயில் வார்ப்பு பகுதியில் சடலமாக இருப்பதாகபோலீசார்க்கு பணியில் போலீசார் தகவல் தெரிவித்தனர். சாமுவேல் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

# சுதந்திரப் போராட்ட வீரர் என்.சங்கரையாவின் மறைவிற்கு அனைத்துக் கட்சியினர் புகழஞ்சலி



புதுக்கோட்டை, நவ.16–

சுதந்திரப் போராட்ட வீரரும்,இந்தியகம்யூனிஸ்ட் இயக்கத்தின் முதுபெரும் தலைவருமான தோழர் என்.சங்கரையா(102)-வின் மறைவிற்கு புதுக்கோட்டையில் அனைத்துக் கட்சியினர் அஞ்சலி செலுத்தினர்.

புதுக்கோட்டை அண்ணாசிலை அருகே நடைபெற்ற புகழஞ்சலி நிகழ்ச்சிக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் எஸ்.கவிவர்மன் தலைமை வகித்தார், கட்சியின் மாநிலக்குழு உறுப்பினரும், கந்தர்வகோட்டை தொகுதி சட்டப்பேரவை உறுப்பினருமான எம். சின்னதுரை, முன்னாள் எம்எல்ஏ கவிச்சுடர் கவிதைப்பித்தன், திமுக நகரச் செயலாளர் ஆ.செந்தில், காங்கிரஸ் வடக்குமாவட்டத்தலைவர் வி.முருகேசன், மதிமுக மாவட்டச் செயலாளர் கே.கலியமூர்த்தி, சிபிஐ மாவட்டச் செயலாளர் த.செங்கோடன் சிபிஐ(எம்.எல்)மாவட்டச்செயலாளர் மு.வளத்தான்,விவசாயிகள் ஐக்கிய முன்னணிமாவட்ட ஒருங்கிணைப்பாளர் மு.மாதவன், தமுஎகச மாவட்டத் தலைவர் ராசி.பன்னீர்செல்வம், விவசாயிகள் சங்கங்களின் சார்பில் ஜி.எஸ்.தனபதி உள்ளிட்டோர் புகழஞ்சலி உரை நிகழ்த்தினர்.

நிகழ்ச்சியில் அனைத்து கட்சியினர் உள்ளிட்ட பல்வேறு அமைப்பினர் ஏராளமானோர் பங்கேற்றனர்.

# தென்காசி நகராட்சி பள்ளியில் குழந்தைகள் தின விழா




தென்காசி,நவ.16–

தென்காசி13வதுவார்டு நகராட்சி நடுநிலைப் பள்ளியில் குழந்தைகள் தின விழா கொண்டாடப் பட்டது, விழாவிற்கு தலைமை ஆசிரியர் (பொறுப்பு) வின்சென்ட் தலைமை வகித்தார், ஆசிரியை கௌசல்யா முன்னிலை வகித்தார், ஆசிரியை தமிழ்செல்வி வரவேற்புரை ஆற்றினார்.

நேருவின் வாழ்க்கை வரலாறு பற்றிய திரைப்படம் திரையிடப் பட்டது, நேருவின் வாழ்க்கையில் நடைபெற்ற சுவாரசியமான நிகழ்வுகளை ஆசிரியர் வின்சென்ட் மாணவர்களுக்கு கூறினார், மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது,முடிவில் ஆசிரியை இஸ்மாயில் சோபியா நன்றி கூறினார், விழாவிற்கான ஏற்பாடுகளை ஆசிரியர்கள் எப்சிபா, விமலா, மாலா மற்றும் ராதா ஆகியோர் செய்திருந்தனர்.

# ‘திருட்டு மின்சாரத்தில் குமாரசாமி வீடு அலங்கரிப்பு’ காங்கிரஸ் புகாரால் மின்வாரிய அதிகாரிகள் விசாரணை



பெங்களூரு , நவ.16–

கர்நாடக முன்னாள் முதல்வரும், முன்னாள் பிரதமர் தேவகவுடாவின் மகனுமான குமாரசாமி தீபாவளி பண்டிகைக்கு திருட்டு மின்சாரத்தை பயன்படுத்தி தனது வீட்டை அலங்கரித்ததாக சொல்லப்பட்ட விவகாரம் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

கர்நாடக முன்னாள் முதல்வர் குமாரசாமி பெங்களூருவில் உள்ள ஜே.பி.நகரில் தனது குடும்பத்தினருடன் வசித்து வருகிறார். தீபாவளி பண்டிகையொட்டி அவரது வீடு மின் விளக்குகளால் அலங்கரிக்கப் பட்டிருந்தது. இதற்காக, மின் கம்பத்தில் இருந்து நேரடியாக மின்சாரத்தை திருடப்பட்ட வீடியோ சமூக வலைதளங்களில் வெளியானது. இதனை கர்நாடக காங்கிரஸ் ஐடி பிரிவு, எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்து, ‘‘உலகிலேயே நேர்மையானவரான குமாரசாமியின் வீட்டின் அலங்கார விளக்குகளுக்கு சட்ட விரோதமாக மின்சார இணைப்பு எடுக்கப்பட்டுள்ளது. மின்சாரத்தை திருடும் அளவுக்கு ஏழ்மையில் வாடும் முன்னாள் முதல்வரின் நிலை ஆழ்ந்த வருத்தத்துக்கு உரியது. அவர் வேண்டுமானால் 200 யூனிட் இலவச மின்சாரம் அளிக்கும் திட்டத்துக்கு விண்ணப்பிக்கலாம்” என விமர்சித்தது.

இதுகுறித்து குமாரசாமி கூறுகையில், “இந்த தவறுக்காக மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன். மின்வாரிய அதிகாரிகள் அபராதம் விதித்தால் அதனை செலுத்த தயாராக இருக்கிறேன். நான் ஒருபோதும் அரசின் சொத்தை அபகரிக்க மாட்டேன். எனது வீட்டை அலங்கரித்த பணியாளர்கள் இந்த தவறை செய்துள்ளனர். காங்கிரஸார் மிகவும் சிறிய விவகாரத்தை கையிலெடுத்துக்கொண்டு எனது வாயை அடைக்க முயற்சிக்கின்றனர்” என்றார்.

இந்நிலையில், கர்நாடக துணை முதல்வர் டி.கே. சிவகுமார், ‘‘குமாரசாமி மீது மின்வாரியம் உரிய நடவடிக்கை எடுக்கும். வழக்கு ஏதேனும் போடப்பட்டுள்ளதா என தெரியவில்லை’’ என தெரிவித்தார். இதனிடையே, மின்வாரிய ஊழியர் குமாரசாமியின் வீட்டுக்கு சென்று மின்சார திருட்டு குறித்து விசாரணை மேற்கொண்டனர். மின்சாரத்தை திருடியதற்காக குமாரசாமிக்கு அபராதம் விதிக்கவும் திட்டமிட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

# ஜம்மு காஷ்மீரில் பேருந்து பள்ளத்தில் கவிழ்ந்து 36 பேர் உயிரிழப்பு : மீட்புப் பணிகள் தீவிரம்



ஸ்ரீநகர், நவ. 16–

ஜம்மு காஷ்மீரில் பேருந்து பள்ளத்தில் கவிழ்ந்த விபத்தில் 36 பேர் உயிரிழந்தனர். இதனை மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங் உறுதி செய்துள்ளார். மீட்புப் பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது.

ஜம்மு காஷ்மீரின் தோடா மாவட்டத்தில் படோடி - கிஷ்த்வார் தேசிய நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த பேருந்து திடீரென 300 அடி ஆழமுள்ள பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. பேருந்து பள்ளத்தில் உருண்டு கீழே விழுந்ததில், அதில் இருந்த 36 பேர் உயிரிழந்தனர். 19 பேர் காயமடைந்துள்ளனர். அவர்களில் 6 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது. மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங் இனை உறுதி செய்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "விபத்து குறித்த தகவல் கிடைத்ததும் தோடா மாவட்ட ஆட்சியர் ஹர்விந்தர் சிங் உடன் தொலைபேசியில் பேசினேன். இந்த விபத்தில் துரதிருஷ்டவசமாக 36 பேர் உயிரிழந்தனர். 19 பேர் காயமடைந்துள்ளனர். இவர்களில் 6 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது. விபத்தில் சிக்கியவர்களை மீட்க ஹெலிகாப்டருக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. காயமடைந்தவர்கள் அருகில் உள்ள தோடா அரசு மருத்துவமனை மற்றும் ஜம்முவில் உள்ள பொது மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர். அவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல்" என தெரிவித்துள்ளார்.

இந்த விபத்து குறித்து தகவல் தெரிவித்துள்ள அதிகாரிகள், "JK02CN-6555 என்ற பதிவு எண் கொண்ட பேருந்து 55 பயணிகளுடன் சென்று கொண்டிருந்தது. பேருந்து ட்ரங்கல் - அஸ்ஸார் பகுதியில் சென்று கொண்டிருந்தபோது 300 அடி ஆழ பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது" என்று தெரிவித்துள்ளனர்.

# உத்தர்காசி சுரங்கப்பாதை விபத்து : புதிய நிலச்சரிவால் மீட்புப் பணிகளில் சுணக்கம்



டேராடூன் : நவ. 16, உத்தராகண்ட மாநிலம் உத்தரகாசி மாவட்டத்தில் சுரங்கத்தில் சிக்கியுள்ள 40 தொழிலாளர்களை மீட்கும் பணிகள் 4வது நாளாக நேற்று நடந்தது. இந்நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை ஏற்பட்ட புதிய நிலச்சரிவால் பணிகளில் சுணக்கம் ஏற்பட்டுள்ளது.

சுரங்கப்பாதை தோண்டும் போது ஏற்பட்ட இடிபாடுகளில் சிக்கியுள்ள 40 தொழிலாளர்களை மீட்கும் பணி 4-வது நாளாக நேற்று காலை தொடங்கியது. இடிபாடுகளுக்குள் எஃகு குழாய்களை செலுத்தி தொழிலளார்களை மீட்கும் விதமாக புதிய இயந்திரத்தை நிர்மாணிக்கும் பணிகளில் அதிகாரிகள் ஈடுபட்டனர். இந்நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை இரவு ஏற்பட்ட புதிய நிலச்சரிவு காரணமாக மீட்புப்பணிகளில் சுணக்கம் ஏற்பட்டுள்ளது. மேலும், மீட்புப்பணிகளில் ஈடுபட்டிருந்த இரண்டு தொழிலாளர்கள் காயமடைந்தனர். அவர்கள் சிகிச்சைக்காக அருகில் உள்ள மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்படனர்.

இடிபாடுகளுக்குள் குழாய்களை புகுத்தி அதன்வழியாக தொழிலாளர்களை மீட்கும் பணிகளைப் பார்வையிட்ட பின் உத்தரகாசி மாவட்ட ஆட்சியர் அபிஷேக் ரூகேலா செய்தியாளர்கரளிடம் பேசியபோது, "துளையிடும் இயந்திரத்தின் உதவியுடன் குழாய்களை இடிபாடுகளுக்குள் உள்ளே செலுத்தி உள்ளே சிக்கியுள்ள தொழிலாளர்களை மீட்கும் பணி தொடங்கியுள்ளது. அனைத்தும் திட்டமிட்டபடி சரியாக நடந்தால் உள்ளே சிக்கியிருக்கும் தொழிலாளர்கள் நேற்று மாலைக்குள் மீட்கப்படுவார்கள்." என்று தெரிவித்திருந்தார்.

நிலச்சரிவால் ஏற்பட்டுள்ள இடிபாடுகளுக்குள் 900 மில்லி மீட்டர் விட்டமுள்ள மெல்லிய எஃக்கு குழாய்களை செலுத்தி, அதன் வழியாக தொழிலாளர்களை மீட்க திட்டமிடப்பட்டுள்ளது. தொழிலாளர்கள் உள்ளே புகுந்து வெளியேறுவதற்கு 900 மி.மீ., விட்டம் போதுமானதாக இருக்கும். 900 மி.மீ., 800 மி.மீ., விட்டமுள்ள மெல்லிய எஃக்கு குழாய்களை ஒன்றன் பின் ஒன்றாக உள்ள புகுத்தி அதன்வழியாக தொழிலாளர்களை மீட்பதே திட்டம் என்று மீட்பு பணி அதிகாரிகள் தெரிவித்தனர். சுரங்கப் பாதையில் சிக்கியுள்ள தொழிலாளர்கள் சுவாசிப்பதற்காக குழாய் வழியாக ஆக்சிஜன் செலுத்தப்பட்டு வருகிறது. உணவு பொருட்கள், குடிநீர் உள்ளிட்டவை மற்றொரு குழாய் வழியாக விநியோகிக்கப்பட்டும், வாக்கி டாக்கி மூலம் தொழிலாளர்களுடன் அதிகாரிகள் அவ்வப்போது பேசி வருகின்றனர்.

முன்னதாக, உத்தராகண்டில் சார்தாம் நெடுஞ்சாலை திட்டத்தின் ஒரு பகுதியாக உத்தரகாசி, யமுனோத்ரியை இணைக்கும் வகையில் சில்க்யாரா வளைவு - பர்காட் இடையே 4.5 கி.மீ. தொலைவுக்கு சுரங்கப்பாதை அமைக்கப்பட்டு வருகிறது. கடந்த 12-ம் தேதி அதிகாலை 4 மணி அளவில் 60 மீட்டர் தொலைவு சுரங்கப் பாதையில் மண் சரிந்தது. இருபுறமும் மணல் மூடிய நிலையில் சுரங்கப் பாதைக்குள் 40 தொழிலாளர்கள் சிக்கி உள்ளனர். பல்வேறு துறைகளை சேர்ந்த 200-க்கும் மேற்பட்ட நிபுணர்கள் இரவு பகலாக மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.



தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம் கம்மம்பட்டி ஊராட்சியில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப்பணிகளை கலெக்டர் சாந்தி பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் லோகநாதன், ஆறுமுகம் ஆகியோர் உள்ளனர்.

# வனவாசி பெருமித தினம் : பிர்சா முண்டா பிறந்த நாளில் குடியரசுத் தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் மரியாதை



புதுடெல்லி : நவ. 16, வனவாசி சமூக சுதந்திரப் போராட்ட வீரர் பிர்சா முண்டாவின் பிறந்த நாளை முன்னிட்டு, குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் ஜக்தீப் தன்கர், பிரதமர் நரேந்திர மோடி, மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா உள்ளிட்டோர் அவரது உருவப்படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

வனவாசி சமூகத்தைச் சேர்ந்த சுதந்திரப் போராட்ட வீரர் பிர்சா முண்டாவின் பிறந்த நாள் வனவாசி பெருமித தினமாக நேற்று கொண்டாடப்பட்டது. இந்த தினத்தை முன்னிட்டு, டெல்லியில் நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள பிர்சா முண்டாவின் உருவச் சிலைக்கும், அதன் அருகில் வைக்கப்பட்டுள்ள அவரது உருவப்படத்துக்கும் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் ஜக்தீப் தன்கர், மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா, மத்திய அமைச்சர் மீனாட்சி லேகி உள்ளிட்டோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர். இதையடுத்து, அங்கு நடைபெற்ற வனவாசி மக்களின் பாரம்பரிய இசை மற்றும் நடன நிகழ்ச்சியில் அனைவரும் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் ஏராளமான வனவாசி மக்கள் கலந்து கொண்டனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மீனாட்சி லேகி, வனவாசி பெருமித தினம் மத்திய அரசு சார்பில் கொண்டாடப்படுகிறது. நாட்டின் சுதந்திரப் போராட்டத்தில் வனவாசி மக்கள் மிகப் பெரிய பங்களிப்பை அளித்துள்ளனர். அவர்களின் பங்களிப்பு ஒவ்வொருவரையும் பெருமை கொள்ளச் செய்கிறது. வனவாசி மக்களின் முன்னேற்றத்துக்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது என தெரிவித்தார்.

பிர்சா முண்டாவின் பிறந்த இடமான ஜார்க்கண்ட் மாநிலம் குந்தி மாவட்டத்தில் உள்ள உலிஹாட்டுவில் உள்ள அவரது நினைவிடத்தில் பிரதமர் நரேந்திர மோடி நேரில் மலர் தூவி மரியாதை செலுத்தினார். இதையடுத்து, அந்த கிராமத்தில் நிறுவப்பட்டுள்ள மிகப் பெரிய பிர்சா முண்டாவின் சிலைக்கு பிரதமர் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பின்னர், குந்தியில் நடைபெற்ற கண்காட்சியை பிரதமர் மோடி பார்வையிட்டார்.

# திருமயம் மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களுக்கான இலவச மருத்துவ மதிப்பீட்டு முகாம்



திருமயம், நவ.16–

திருமயம் ஒன்றியத்தில் ஒருங்கிணைந்த பள்ளி கல்வி சார்பில் மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களுக்கான இலவச மருத்துவ மதிப்பீட்டு முகாம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது,முகாமிற்கு திருமயம் ஒன்றியக்குழு உறுப்பினர் சரண்யா சரவணன் ,ஊராட்சி மன்றத் தலைவர் சிக்கந்தர் ஆகியோர் தலைமை வகித்தனர். மாவட்ட உதவித் திட்ட அலுவலர் கோவிந்தசாமி ,வட்டார கல்வி அலுவலர்கள் மகேஸ்வரன் மற்றும் ஜேம்ஸ் ஆரோக்கியசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். வட்டார வளமைய மேற்பார்வையாளர் வரவேற்றார், முகாமில் மாற்றுத்திறன் கொண்ட 100 குழந்தைகள் கலந்து கொண்டனர்.

முகாமில் கலந்து கொண்ட மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களுக்கு மருத்துவர்கள் பரிசோதனை செய்து அடையாள அட்டை வழங்குதல் , உதவி உபகரணங்கள் பரிந்துரை செய்தல்,ஆதார் அட்டை பதிவு செய்தல் , உதவித்தொகை பெற பதிவு செய்ய பரிந்துரை செய்யப்பட்டது, முகாமில் கலந்து கொண்ட 21 மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களுக்கு புதிய அடையாள அட்டை வழங்கப்பட்டது.

மேலும் முகாமில் கலந்து கொண்ட மாற்றுத்திறன் மாணவர்களுக்கு தேநீர், மதிய உணவு மற்றும் பயணப்படி வழங்கப்பட்டது, நிறைவாக ஆசிரியர் பயிற்றுநர் விஜயசாந்தி நன்றி கூறினார். ஆசிரியர் பயிற்றுநர்கள் பிரகதாம்பாள், பரிசுத்தம் இயன்முறை மருத்துவர் செந்தில் குமார், சிறப்பாசிரியர்கள் பேபி, ஜூலியட் நிர்மலா மேரி, ஆரோக்கிய குளோரி, பள்ளி ஆயத்த மைய ஆசிரியர் கலா, உதவியாளர் செல்வி, பல்வேறு ஒன்றியத்தில் இருந்து வருகை தந்த இயன்முறை மருத்துவர்கள், சிறப்பாசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.


# டாஸ்மாக் மதுபானக்கூடத்தை அடித்து நொறுக்கிய நபர்கள் சிறையில்



ஆவுடையார்கோவில் , நவ. 16–

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஆவுடையார்கோவில் அருகில் உள்ள புண்ணியவயல் 6708என்ற டாஸ்மாக் கடை அருகில் மதுபானக்கூடம் அமைந்துள்ளது. அதில் அதே பகுதியைச் சேர்ந்த நான்கு நபர்கள். கார்த்திக், குருமூர்த்தி, முத்துபழனி, விக்னேஷ் ஆகியோர் அந்த மதுபானக்கூடத்தில் இருந்த டேபிள் சேர், பாட்டில்கள் உள்ளிட்டவற்றை அடித்து நொறுக்கி சேதப்படுத்தி உள்ளனர் என்பது இவர்கள் மீதான குற்றசாட்டின் அடிப்படையில் ஆவுடையார்கோவில் போலீசார் வழக்கு பதிவு செய்து 4 பேரையும் கைது செய்து அறந்தாங்கி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி அறந்தாங்கி கிளை சிறையில் அடைத்தனர். அதேபோல் ஆவுடையார்கோவில் பகுதியில் ரவுடிகளின் அட்டகாசம் அதிகமாக இருப்பதாக அங்குள்ள பொதுமக்கள் கூறுகின்றனர். அதையும் காவல்துறையினர் இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கழுத்தில் போதை ஊசியை செலுத்திக் கொண்ட வாலிபர் மயங்கி விழுந்து சாவு : சென்னையில் பரபரப்பு



சென்னை, நவ. 16–

சென்னையில் அளவுக்கு அதிகமான போதை மருந்தை கழுத்தில் ஊசியில் செலுத்திக் கொண்ட வாலிபர் மயங்கி விழுந்து உயிரிழந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சென்னை புளியந்தோப்பு கனகராயத் தோட்டம் பகுதியைச் சேர்ந்தவர் மணி (48). இவருக்கு வேலா (45) என்ற மனைவியும், சங்கீதா என்ற மகளும், புருஷோத்தமன் சதீஷ் ஆகிய மகன்களும் இருந்தனர். மணியும், அவரது மனைவி வேலா இருவரும் சேர்ந்து வில்லிவாக்கம் மார்க்கெட்டில் சொந்தமாக பூமாலை கடை நடத்தி வருகின்றனர். இந்நிலையில் இவர்களது மகன் சதீஷ் (22) கடந்த இரண்டு ஆண்டுகளாக போதைப் பழக்கத்திற்கு அடிமையானதாக கூறப்படுகிறது.

இதனையடுத்து அவரை செங்குன்றத்தில் உள்ள போதை மறுவாழ்வு மையத்தில் சிகிச்சைக்காக அவரது பெற்றோர் சேர்த்துள்ளனர். மூன்று மாதம் சிகிச்சை முடிந்து வந்த சதீஷ் போதைப் பழக்கத்தில் இருந்து மீளவில்லை. அவர் தொடர்ந்து அதிக போதைக்காக பல்வேறு போதை ஊசிகளை பயன்படுத்தி வந்ததாக தெரிகிறது. நேற்று காலை சதீஷ் தனது வீட்டருகே ஆள் நடமாட்டம் இல்லாத பகுதிக்கு சென்று அளவு அதிகமான போதை மருந்தை ஊசியில் எடுத்து தனது கழுத்தில் செலுத்திக் கொண்டார்.

அப்போது போதை தலைக்கேறி சதீஷ் மயங்கி விழுந்தார். தகவல் அறிந்த அவரின் உறவினர் லதா என்பவர் சம்பவ இடத்திற்குச் சென்று சதீஷை மீட்டு சிகிச்சைக்காக ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள், சதீஷ் ஏற்கெனவே உயிரிழந்து விட்டதாக தெரிவித்தனர். இதுகுறித்த தகவல் அறிந்து புளியந்தோப்பு போலீஸார், மருத்துவமனைக்கு சென்று சதீஷ் உடலைக் கைப்பற்றி வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

முதற்கட்ட விசாரணையில் இறந்து போன சதீஷ், டைக்கோபின் என்ற போதை மருந்தை அவ்வப்போது பயன்படுத்தி வந்ததும் நேற்று காலை அளவுக்கு அதிகமான போதை மருந்தை கழுத்தில் ஊசி மூலம் செலுத்திக் கொண்டதால் மயங்கி விழுந்து உயிரிழந்ததும் தெரியவந்தது. இதையடுத்து சதீஷ் பயன்படுத்திய போதை மருந்து மற்றும் ஊசி ஆகியவற்றை போலீஸார் கைப்பற்றினர். மேலும் அவர் எங்கிருந்து இந்த மருந்தை வாங்கினார் என்பது குறித்து அவரது உறவினர்களிடம் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், சதீஷின் பிரேத பரிசோதனை அறிக்கை வந்த பின்னரே அவர் இறப்பிற்கான காரணம் தெரிய வரும் என போலீஸார் தெரிவித்துள்ளனர். போதைக்கு அடிமையான இளைஞர் அளவுக்கு அதிகமான போதை ஊசியை செலுத்திக்கொண்டதால் உயிரிழந்த சம்பவம் அவரது உறவினர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

# அவரை மனநல மருத்துவரிடம் அழைத்துச் செல்லுங்கள் இன்சமாம் மீது ஹர்பஜன் சரமாரி சாடல்



**விளையாட்டு செய்தி : நவ. 16,**

**மதமாற்றம் தொடர்பாக தன் மீது முன்வைத்த கருத்துக்காக பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் இன்சமாம் உல் ஹக்கை வெகுவாக சாடியுள்ளார் ஹர்பஜன் சிங். அவரை மனநல மருத்துவரிடம் அழைத்துச் செல்லுமாறும் ஹர்பஜன் கூறியுள்ளார்.**

முன்னதாக, இன்சமாம் உல் ஹக் ஓர் ஊடகப் பேட்டியில், “இந்தியா - பாகிஸ்தான் தொடரின்போது மவுலானா தாரிக் ஜமீல் சொற்பொழிவைக் கேட்ட ஹர்பஜன் சிங் இஸ்லாம் மதத்தைத் தழுவுவதில் நெருங்கிவிட்டார்” என்று கூறியிருந்தார். இது தொடர்பாக பதிலளித்துள்ள ஹர்பஜன் சிங், “யாராவது இன்சமாம் உல் ஹக்கை ஒரு நல்ல மனநல மருத்துவரிடம் அழைத்துச் செல்லுங்கள். அவர் நல்ல மனநிலையில் இல்லை. அவர் சில பொருத்தமற்ற விஷயங்களைப் பேசியுள்ளார். நான் ஒரு சீக்கியர். ஒரு சீக்கியக் குடும்பத்தில் பிறந்ததில் எனக்கு மகிழ்ச்சி. அப்படியிருக்க, இன்சமாம் உல் ஹக் கண்டபடி பேசியுள்ளார். ஊடகத்தின் முன் இப்படிப் பேச அவர் எவ்வளவு குடித்திருந்தாரோ அல்லது என்னத்தை புகைத்திருந்தாரோ தெரியவில்லை. குடிபோதையில் அவர் எதைச் சொல்லியிருந்தாலும் அடுத்த நாள் அது அவர் நினைவில் இருக்காது என்பது மட்டும் உறுதி” என்று கூறியுள்ளார்.

முன்னதாக எக்ஸ் தளத்தில் ஹர்பஜன், “நான் ஒரு பெருமித இந்தியன். பெருமித சீக்கியர்” என்று பதிவிட்டிருந்தார். கடந்த அக்டோபர் 30-ஆம் தேதி பாகிஸ்தான் கிரிக்கெட் அணி முதன்மைத் தேர்வாளர் பதிவியில் இருந்து விலகுவதாக இன்சமாம் உல் ஹக் தெரிவித்திருந்தார். தன் மீதான குற்றச்சாட்டுகள் பொய் என நிரூபணமானதும் மீண்டும் பதவியில் தொடர்வேன் எனக் கூறியிருந்தார்.

இன்சமாம் 1991 முதல் 2007 வரையில் பாகிஸ்தான் அணிக்காக சர்வதேச கிரிக்கெட்டில் விளையாடியவர். மொத்தமாக 499 சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி 20,580 ரன்கள் குவித்துள்ளார். 35 சதங்கள் இதில் அடங்கும். இந்திய அணிக்கு எதிராக 67 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 2,403 ரன்கள் எடுத்துள்ளார். 2003 முதல் 2007 வரையில் பாகிஸ்தான் அணியின் கேப்டனாக செயல்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, பாகிஸ்தானில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் கிரிக்கெட் வீரர் அப்துல் ரஸாக் பேசும்போது, “பாகிஸ்தான் அணிக்கு தற்போது ஒரு மன எழுச்சி தேவை. அந்த காலங்களில் யூனிஸ் கான் ஒரு கேப்டனாக ஒரு நல்ல எண்ணம் கொண்டிருந்தார். அது எனக்கு சிறப்பாக செயல்பட நம்பிக்கையை அளித்தது. உண்மையில், பாகிஸ்தானில் வீரர்களை உருவாக்கி மெருகூட்ட வேண்டும் என்ற நல்ல எண்ணம் எங்களுக்கு இல்லை. நீங்கள் ஐஸ்வர்யா ராயை திருமணம் செய்துகொண்டு ஒழுக்கமுள்ள குழந்தையை எதிர்பார்க்க விரும்பினால், அது ஒருபோதும் நடக்காது” என்று கூறினார். பாகிஸ்தான் முன்னாள் வீரர்கள் ஷாகித் அப்ரிடி, உமர் குல் போன்றோர் இதனை சிரித்து கைதட்டி ரசித்தனர். அது சர்ச்சையாகவே அவர் பகிரங்க மன்னிப்பு கோரினார். அந்த சர்ச்சை அடங்குவதற்குள்ளேயே இன்சமாம் உல் ஹக் இந்திய வீரர் ஹர்பஜன் சிங்கை விமர்சித்து பரபரப்பைக் கிளப்பியுள்ளார்.

# “தைரியமானவர்களுக்கு அதிர்ஷ்டம் சாதகமாக இருக்கும்” – ரோஹித் சர்மா



**மும்பை : நவ. 16,**

**உலகக் கோப்பை தொடரின் அரை இறுதி ஆட்டத்தில் இந்திய அணி நேற்று நியூஸிலாந்துடன் பலப்பரீட்சை நடந்தது. இதையொட்டி நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை நடைபெற்ற பத்திரிகையாளர்கள் சந்திப்பின் போது இந்திய அணியின் கேப்டன் ரோஹித் சர்மா கூறியதாவது:**

அதிர்ஷ்டம் சாதகமாக இருக்கும் நேரம் வந்துவிட்டது, தைரியமானவர்களுக்கு அதிர்ஷ்டம் சாதகமாக இருக்கும். லீக் சுற்றில் நாங்கள் செய்ததை அப்படியே தொடர வேண்டும். அதை தவிர்த்து வேறு எதையும் செய்ய வேண்டும் என்று நான் நினைக்கவில்லை. உலகக் கோப்பையில் லீக் ஆட்டமாக இருந்தாலும் அல்லது அரை இறுதியாக இருந்தாலும் எப்போதும் அழுத்தம் இருக்கும். நாங்கள் முதல் ஆட்டத்தில் இருந்து கடைசி ஆட்டம் வரை அழுத்தத்தை சிறப்பாக கையாண்டோம். இதற்கு அணி சரியாக பதில் அளித்துள்ளது.

அடுத்த இரண்டு ஆட்டங்களிலும் நல்ல கிரிக்கெட் விளையாடுவதில் கவனம் செலுத்திவருகிறோம். இந்திய கிரிக்கெட் வீரர்களாகிய எங்களுக்கு எப்போதுமே அழுத்தம் இருக்கும். அழுத்தங்கள் மற்றும் சவால்களில் கவனம் செலுத்தாமல் விளையாட்டில் கவனம் செலுத்த வேண்டும்,

நியூஸிலாந்து மிகவும் ஒழுக்கமான அணி. அவர்கள் ஸ்மார்ட் கிரிக்கெட் விளையாடுகிறார்கள், அவர்கள் எதிரணியை நன்கு புரிந்துகொள்கிறார்கள். எதிர் அணிகளின் மனநிலையையும் புரிந்து வைத்துள்ளனர். மேலும், அவர்கள் ஐசிசி தொடர்களில் அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகளில் மிகவும் சீரான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றனர்.

கபில் தேவ் தலைமையில் 1983-ம் ஆண்டு, தோனி தலைமையில் 2011-ம் ஆண்டு செய்த சாதனைகளை தொடர வேண்டிய அழுத்தம் இருக்கிறது. ஆனால் தற்போதுள்ள வீரர்கள் தங்களது ஆட்டத்தில் முன்னேற்றம் காண்பதையே விரும்புகின்றனர். இதுதான் இந்த அணியின் அழகே. முதன் முறையாக கோப்பையை வென்ற போது தற்போது அணியில் உள்ள வீரர்கள் பாதிபேர் பிறக்கவே இல்லை. கடைசியாக கோப்பையை வென்ற போது இப்போது அணியில் உள்ள பாதிபேர் இடம் பெறவில்லை.

.கடந்த காலங்களில் கோப்பையை வென்றது குறித்து அணியில் வீரர்கள் பேசுவதை நான் பார்த்தது இல்லை. சிறப்பாக செயல்படுவதிலும், ஆட்டத்தை எவ்வாறு மேம்படுத்துவது என்பதிலும்தான் கவனம் செலுத்துகிறோம். என்று ரோஹித் சர்மா கூறினார்.

# உலகக் கோப்பை கிரிக்கெட்டில் படுதோல்வி எதிரொலி கேப்டன் பொறுப்பில் இருந்து விலகினார் பாபர் அசம்



**பாகிஸ்தான் : நவ. 16,**

**பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் கேப்டன் பொறுப்பில் இருந்து விலகுவதாக நட்சத்திர வீரர் பாபர் அசம் தெரிவித்துள்ளார்.**

உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் பாகிஸ்தான் அணி மோசமான தோல்வியை சந்தித்தது. இதனால் அந்த அணி பல்வேறு விமர்சனங்களுக்கு உள்ளானது. அணியின் தேர்வு குழு தலைவர் பதவியில் இருந்து முன்னாள் வீரர் இன்சமாம் பதவி விலகினார்.

அவரைத் தொடர்ந்து பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சு பயிற்சியாளர் மோர்னே மார்கல் தனது பதவியை ராஜினாமா செய்தார். இந்நிலையில், தற்போது பாகிஸ்தான் அணியின் கேப்டன் பாபர் அசம், தனது பொறுப்பில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள அவர், 2019 முதல் நான்கு வருடங்கள் அணியில் களத்திற்கு உள்ளேயும், வெளியேயும் பல ஏற்ற, இறக்கங்களை கண்டதாக குறிப்பிட்டுள்ளார். பாகிஸ்தான் அணி நிர்வாகம், வீரர்கள், பயிற்சியாளர்களின் முயற்சியால் தாம் ஒருநாள் கிரிக்கெட்டில் முதல் இடத்தை பிடித்ததாக தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து ஆதரவு அளித்து வரும் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்களுக்கு நன்றி தெரிவித்துள்ள பாபர் அசம், அனைத்து விதமான கிரிக்கெட்டிலும் கேப்டன் பொறுப்பில் இருந்து விலகுவதாக குறிப்பிட்டுள்ளார்.

வீரராக தொடர்ந்து விளையாடுவேன் என்று கூறியுள்ள பாபர் அசம், புதிய கேப்டனுக்கு முழு ஒத்துழைப்பு அளிப்பேன் என தெரிவித்துள்ளார். அதே போல் பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்திற்கும் பாபர் அசம் நன்றி தெரிவித்துள்ளார்.

# “நன்றி தலைவா” – நேரில் வாழ்த்திய ரஜினிக்கு கார்த்திக் சுப்பராஜ் நெகிழ்ச்சி பதில்



**சென்னை : நவ. 16,**

**‘ஜிகர்தண்டா டபுள் எக்ஸ்’ படத்தைப் பார்த்து படக்குழுவினரை நேரில் பாராட்டிய ரஜினிகாந்துக்கு இயக்குநர் கார்த்திக் சுப்பராஜ் நெகிழ்ச்சியுடன் நன்றி தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அவர் தனது எக்ஸ் பதிவில், “உங்கள் அன்புக்கும் பாராட்டுக்கும் மிக்க நன்றி தலைவா. நீங்கள் எங்களுடன் நடத்திய ஒரு மணி நேர உரையாடல் எனக்கும் எங்கள் ஒட்டுமொத்த குழுவினருக்கும் ஒரு பாசிட்டிவ் மனநிலையை வழங்கியுள்ளது. எங்கள் ‘ஜிகர்தண்டா டபுள் எக்ஸ்’ குழுவினரிடமிருந்து உங்களுக்கு நிறைய அன்புகள் தலைவா” என்று கூறியுள்ளார்.

முன்னதாக ‘ஜிகர்தண்டா டபுள் எக்ஸ்’ படத்தை பார்த்த ரஜினிகாந்த் படத்தை பெரிதும் பாராட்டி அறிக்கை வெளியிட்டிருந்தார். அதில், “ஜிகர்தண்டா XX படம் ஒரு குறிஞ்சி மலர். கார்த்திக் சுப்பராஜின் அற்புதமான படைப்பு , வித்தியாசமான கதை மற்றும் கதைக்களம். சினிமா ரசிகர்கள் இதுவரைக்கும் பார்க்காத புதுமையான காட்சிகள். ‘லாரன்ஸால’ இப்படியும் நடிக்க முடியுமா என்ற பிரம்மிப்பை நமக்கு உண்டாக்குகிறது. எஸ். ஜே.சூர்யா இந்நாளின் திரை உலக நடிகவேள். கார்த்திக் சுப்பராஜ் மக்களை கைதட்ட வைக்கிறார், பிரமிக்க வைக்கிறார், சிந்திக்க வைக்கிறார், அழவும் வைக்கிறார். i am proud of you கார்த்திக் சுப்பராஜ்” என்று கூறியிருந்தார்.

# ‘மைலாஞ்சி’ படத் தலைப்பு மாற்றம்



**சென்னை : நவ. 16,**

**எழுத்தாளர் அஜயன் பாலா, இயக்குநராக அறிமுகமாகும் படத்தில் ‘கன்னிமாடம்’ ஸ்ரீராம் கார்த்திக், கிரிஷா குருப், சிங்கம்புலி , முனீஷ்காந்த், தங்கதுரை உட்பட பலர் நடித்துள்ளனர்.**

இளையராஜா இசையமைக்கும் இந்தப் படத்துக்கு செழியன் ஒளிப்பதிவு செய்கிறார். அஜய் அர்ஜுன் புரொடக்ஷன்ஸ் சார்பில் டாக்டர் அர்ஜுன் தயாரிக்கிறார். இதன் படப்பிடிப்பு முடிவடைந்துவிட்டது. இந்தப் படத்துக்கு ‘மைலாஞ்சி’ என்று தலைப்பு வைத்திருந்தனர். இதே தலைப்பில் வேறொரு படத்தின் தலைப்பும் பதிவு செய்யப்பட்டிருப்பதால், ‘அஜயன் பாலாவின் மைலாஞ்சி’ என்று மாற்றி வைத்துள்ளனர்.

இதுபற்றி அஜயன் பாலா கூறும்போது, “திரைப்படத் தலைப்புகளின் உரிமையை முறைப்படுத்துவது அவசியம். இந்த நடைமுறையில் உள்ள சிக்கல் காரணமாக, ‘மைலாஞ்சி’ என்ற தலைப்பில் வேறு ஒரு படம் திரைக்கு வந்ததால் தலைப்பை மாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டது. மலைப் பிரதேசத்தைப் பின்னணியாகக் கொண்டு சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதன் அவசியம் குறித்து பேசும் காதல் கதையாக இந்தப் படம் உருவாகி இருக்கிறது. காதலர் தினத்தை முன்னிட்டு பிப்ரவரி மாதம் வெளியாகும் என்றார்.

வரலாறு சினிமா

# அட்லீயின் அடுத்த படத்தில் விஜய், ஷாருக்கான்



**சென்னை : நவ. 16,**

**ஷாருக்கான், நயன்தாரா, விஜய் சேதுபதி நடித்த ‘ஜவான்’ படம் மூலம் இந்திக்குச் சென்றார், இயக்குநர் அட்லீ.**

இந்தப் படம் ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் வசூலித்து சாதனைப் படைத்ததை அடுத்து அவருக்கு அங்கு வரவேற்பு அதிகரித்துள்ளது. இன்னும் ஆறு மாதங்களுக்குப் பிறகுதான் அடுத்த படம் பற்றி யோசிப்பேன் என்று கூறியிருந்தார் அட்லீ. அல்லு அர்ஜுன் உட்பட பல நடிகர்களுடன் பேசி வருவதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், ஒரே படத்தில் விஜய் மற்றும் ஷாருக்கானை நடிக்க வைப்பதற்கான வேலைகளில் ஈடுபட்டு வருவதாக அட்லீ இப்போது தெரிவித்துள்ளார். அவர் கூறும்போது, “ஜவான் படப்பிடிப்பின்போது விஜய், ஷாருக்கான் சந்தித்தார்கள். அவர்கள் இருவரும் பேசிக்கொண்டிருந்தார்கள். பிறகு என்னிடம் ஷாருக்கான், எப்போதாவது இரண்டு ஹீரோ சப்ஜெக்ட் படத்தை இயக்கும் எண்ணமிருந்தால் நாங்கள் ரெடி என்றார். அதையேதான் விஜய் அண்ணாவும் சொன்னார். அதனால் அதற்கான கதையை கஷ்டப்பட்டு எழுதி வருகிறேன். இது என் அடுத்தப் படமாகக் இருக்கலாம்” என்று தெரிவித்துள்ளார்.

# வில்லன் வேடத்தில் நடிப்பை அதிகம் வெளிப்படுத்த முடியும் – நவீன் சந்திரா மகிழ்ச்சி



**சென்னை : நவ. 16,**

**கார்த்திக் சுப்புராஜின் ‘ஜிகர்தண்டா டபுள் எக்ஸ்’ படத்தில் இரக்கமில்லாத வில்லனாக நடித்திருக்கிறார், நவீன் சந்திரா.**

இதற்கு முன், பிரம்மன், சரபம், சிவப்பு, பட்டாஸ் உட்பட சில படங்களில் நடித்துள்ள இவர், தெலுங்கில் பல படங்களில் ஹீரோவாக நடித்துள்ளார். ‘ஜிகர்தண்டா டபுள் எக்ஸ்’ படத்தில் வில்லனாக நடித்தது பற்றி அவர் கூறியதாவது:

இந்தப் படத்துக்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. நான் நடித்த வில்லன் வேடத்தையும் ரசிகர்கள் பாராட்டுகிறார்கள். தியேட்டர் விசிட் சென்றிருந்தேன். பெண்கள் என் கதாபாத்திரத்தை ரசித்தது பெரிய விஷயம். நான் நடித்த ‘அம்மு’ என்ற தெலுங்கு படத்தின் போஸ்ட் புரொடக்‌ஷன் வேலைகள் ஸ்டோன்பெஞ்ச் நிறுவனத்தில் நடந்தது. அதில் என் நடிப்பைப் பார்த்துவிட்டு கார்த்திக் சுப்புராஜ் விசாரித்தார். பிறகு அவரைச் சந்தித்தேன். இந்தப் படத்தில் நெகட்டிவ் கேரக்டரில் நடிப்பது பற்றி சொன்னார். உடனடியாக சம்மதித்தேன். தெலுங்கிலும் நான் நடித்து வருவதால் கால்ஷீட் சிக்கல் இருந்தது. இயக்குநர் கார்த்திக் சுப்புராஜ் எனக்காக, அவர் படப்பிடிப்பைச் சரி செய்தார். அது பெரிய விஷயம்.

இந்தப் படத்தில் எஸ்.ஜே.சூர்யா, ராகவா லாரன்ஸ் ஆகியோருடன் நடித்தது சிறந்த அனுபவம். தமிழில் தொடர்ந்து சிறந்த கதைகளைத் தேர்வு செய்து நடிக்க இருக்கிறேன். வில்லன் வேடங்களில், நடிப்பை வெளிப்படுத்த அதிக வாய்ப்பு கிடைக்கும். அதனால், நடிப்பை வெளிப்படுத்தும் எந்த கேரக்டராக இருந்தாலும் நடிக்கத் தயாராக இருக்கிறேன். அடுத்து ஷங்கர் இயக்கும் ‘கேம் சேஞ்சர்’ படத்தில் நடித்து வருகிறேன். இதிலும் சிறப்பான கேரக்டர் என்று நவீன் சந்திரா கூறினார்.

# ஏ.ஆர்.ரஹ்மான் பாடல் சர்ச்சை மன்னிப்பு கேட்டது தயாரிப்பு நிறுவனம்



**மும்பை : நவ. 16,**

**மிருணாள் தாக்குர், இஷான் கட்டர் நடித்து, அமேசான் பிரைமில் கடந்த 10-ம் தேதி வெளியான இந்திப் படம் ‘பிப்பா’. 1971-ம் ஆண்டு இந்தியா-பாகிஸ்தான் போரின் போது நடந்த உண்மைச் சம்பவங்களைக் கொண்டு உருவாகியுள்ள இந்தப் படத்துக்கு ஏ.ஆர்.ரஹ்மான் இசை அமைத்துள்ளார்.**

இதில் பிரபல வங்கமொழி எழுச்சி கவிஞர் காஸி நஸ்ருல் இஸ்லாமின் ‘கரார் ஓய் லூஹோ கோபட்’என்று தொடங்கும் பாடலை இந்த காலத்துக்கு ஏற்ற வகையில் மறு உருவாக்கம் செய்திருந்தார் ரஹ்மான். இதற்கு நஸ்ருல் இஸ்லாம் குடும்பத்தினர் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். தாளம் மற்றும் ட்யூனை மாற்றி பாடலை உருவாக்கிய விதம் அதிர்ச்சி அளிப்பதாகக் கூறியுள்ளனர்.

அமெரிக்காவில் இருந்து நஸ்ருலின் பேத்தி அனிந்திதா காஸி அனுப்பியுள்ள செய்தியில், “பாடலை இப்படி மாற்றி இருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. உடனடியாக படத்தில் இருந்தும் பொதுத் தளத்தில் இருந்தும் நீக்க வேண்டும்” என்று தெரிவித்துள்ளார். இந்நிலையில், தயாரிப்பு நிறுவனமான ராய் கபூர் பிலிம்ஸ் இதற்காக மன்னிப்புக் கேட்டுள்ளது. “முறையான அனுமதி பெற்றே அந்தப் பாடலை பயன்படுத்தி இருக்கிறோம். வங்கதேச விடுதலைக்காக தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும், சுதந்திரம், அமைதி மற்றும் நீதிக்கான அவர்கள் போராட்டத்தின் உணர்வுகளை மனதில் கொண்டும் அந்தப் பாடல் சேர்க்கப்பட்டது. பாடலை மாற்றியது யார் மனதையும் புண்படுத்தி இருந்தால் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறோம்” என்று தெரிவித்துள்ளது. ஆனால், இதை நஸ்ருல் இஸ்லாமின் பேரனும் பேத்தியும் ஏற்க மறுத்துவிட்டனர்.

# தினமும் 12 பாட்டில் பீர் குடித்ததே கலாபவன் மணி மரணத்துக்கு காரணம் : விசாரணை அதிகாரி பகிர்



**சென்னை : நவ. 16,**

**மலையாள நடிகரான கலாபவன் மணி, தமிழில் ‘ஜெமினி’, ‘புதிய கீதை’, ‘எந்திரன்’, ‘பாபநாசம்’ உள்ளிட்ட படங்களில் நடித்தவர்.**

இவர் கடந்த 2016ம் ஆண்டு கேரள மாநிலம் திருச்சூர், சாலக்குடியில் உள்ள தனது பண்ணை வீட்டில் ரத்த வாந்தி எடுத்த நிலையில் சடலமாக கண்டெடுக்கப்பட்டார். இதனையடுத்து அவரது உடல் பிரேத பரிசோதனைக்காக திருச்சூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இவரது மரணம் குறித்து பல்வேறு சந்தேகங்கள் எழுந்தன. மதுவில் விஷம் கலந்து கொல்லப்பட்டிருக்கலாம் என்று அவரது குடும்பத்தினர் சந்தேகங்களை எழுப்பினர். இதனால் கலாபவன் மணியின் குடும்பத்தினர் தொடர்ந்த வழக்கில், மரணம் குறித்து விசாரிக்க சிபிஐக்கு கேரள உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. அதனை தொடர்ந்து, 2 ஆண்டுகள் விசாரணைக்கு பிறகு, கலாபவன் மணியின் மரணம் கொலையல்ல, அளவுக்கு அதிகமான மதுபானம் அருந்தியதே காரணம் என குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையில், பகீர் தகவலை வெளியிட்டுள்ள கேரள ஐபிஎஸ் அதிகாரி உன்னிராஜன், ‘தினசரி 12 முதல் 13 பாட்டில் பீர் குடித்ததே கலாபவன் மணியின் மரணத்துக்கு காரணம்’ என தெரிவித்துள்ளார். கல்லீரல் செயலிழந்த நிலையிலும் அளவுக்கு அதிகமாக பீர் குடிக்கும் பழக்கத்தை கலாபவன் மணி கைவிடவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. கல்லீரல் செயலிழந்து ரத்த வாந்தி எடுத்தபோதும், அவர் பீர் குடிப்பதை நிறுத்தவில்லை எனவும் தெரியவந்துள்ளது. மரணத்தை கலாபவன் மணியே தேடிக் கொண்டதாக விசாரணை நடத்திய ஐபிஎஸ் அதிகாரி உன்னிராஜன் தெரிவித்துள்ளார். இறந்த நாளில் கூட, கலாபவன் மணி 12 பாட்டில் பீர் குடித்துள்ளார் என்றும் அதில், மெத்தில் ஆல்கஹால் இருந்ததும் பிரேத பரிசோதனையில் கண்டறியப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

# 70 விருதுகளை பெற்ற குறும்படம்



**சென்னை : நவ. 16,**

**சர்வதேசத் திரைப்பட விழாக்களில் 70-க்கும் மேற்பட்ட விருதுகளைப் பெற்றுள்ள ‘சரஸ்’ என்ற படத்தை ஜூட் பீட்டர் டேமியான் என்பவர் இயக்கியுள்ளார்.**

இவர் சார்ட்டட் அக்கவுன்டன்ட். இதுபற்றி அவர் கூறும்போது, “முதலில் ‘சஷ்தி’ என்ற அரைமணி நேரப் படத்தை இயக்கினேன். இதில் செம்மலர் அன்னம், லிசி ஆண்டனி உட்பட பலர் நடித்தனர். கடந்த ஆண்டு 35 சர்வதேச பட விழாக்களில் 75க்கும் மேற்பட்ட விருதுகளை இது பெற்றது. அடுத்து ‘சரஸ்’ குறும்படத்தை இயக்கினேன். இதில் நீலிமா ராணி, என். ஸ்ரீகிருஷ்ணா, வினைதா சிவகுமார், மாஸ்டர் சஞ்சீவ் ஆகியோர் நடித்தனர். இதுவும் பட விழாக்களில் 70-க்கும் மேற்பட்ட விருதுகளைப் பெற்றிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது” என்றார்.

வரலாறு உலகம்

## 239 பிணைய கைதிகளை மீட்பதற்காக

# அல்–ஷிபா மருத்துவமனைக்குள் அதிரடியாக நுழைந்தது இஸ்ரேல்

# ஹமாஸ் அமைப்பினர் சுற்றிவளைப்பு

**காசா : நவ. 16,**

**காசாவில் பிடித்து வைக்கப்பட்டுள்ள 239 பிணைய கைதிகளை மீட்கும் நடவடிக்கையாக அல்-ஷிபா மருத்துவமனைக்குள் இஸ்ரேல் ராணுவம் அதிரடியாக நுழைந்தது.**



பாலஸ்தீனத்தின் காசா பகுதியில் உள்ள ஹமாஸ் தீவிரவாதிகள், இஸ்ரேல் மீது நடத்திய ராக்கெட் குண்டு வீச்சு தாக்குதலை தொடர்ந்து கடந்த 40 நாட்களாக போர் நடந்து வருகிறது. இஸ்ரேல் ராணுவம் தரைவழியாகவும், வான் வழியாகவும் ஹமாஸ் தீவிரவாதிகளை வீழ்த்தி வருகிறது. இதற்கிடையே 239 பேரை காசா பகுதிக்குள் ஹமாஸ் அமைப்பினர் கடத்திச் சென்றனர். இதனால் இஸ்ரேல் ராணுவம் காசாவின் வடபகுதியில் வான்வழித் தாக்குதலில் ஈடுபட்டது. சுமார் 15 லட்சம் பேர் அங்கிருந்து இடம் பெயர்ந்து காசாவின் தென் பகுதிகளில் உள்ள நிவாரண முகாம்களில் தங்கியுள்ளனர்.

ஹமாஸ் தீவிரவாதிகளின் இருப்பிடங்களில் இஸ்ரேல் குண்டு மழை பொழிந்து வரும்நிலையில், காசாவின் மருத்துவமனைகளில் பதுங்கியிருந்த ஹமாஸ் தீவிரவாதிகளையும் ராணுவத்தினர் வேட்டையாடி வருகின்றனர். ஹமாஸ் கட்டுப்பாட்டில் இருந்த நாடாளுமன்ற கட்டிடத்தையும், இஸ்ரேல் ராணுவத்தினர் கைப்பற்றி உள்ளே புகுந்தனர். காசாவின்வடபகுதியில்ஹமாஸ் தீவிரவாதிகளின்கட்டுப்பாட்டில் இருந்த அனைத்து முக்கிய பகுதிகளும் இஸ்ரேல் ராணுவத்தின் கட்டுப்பாட்டில் வந்துவிட்டது. இந்த நிலையில் பிணைய கைதிகள் அடைத்து வைத்திருப்பதாக கூறப்படும் அல்-ஷிபா மருத்துவமனைக்குள் இஸ்ரேல்ராணுவம் அதிரடியாக நுழைந்தது.

அவர்களை எதிர்த்து தாக்குதல் நடத்திய ஹமாஸ் அமைப்பினரை சுட்டுத் தள்ளினர். மருத்துவமனையில் குறிப்பிட்டபகுதியில்புகுந்துள்ள இஸ்ரேல் படைகள், துல்லிய தாக்குதல் மேற்கொண்டு வருகின்றன. இஸ்ரேல் படைகளில் மருத்துவக் குழுக்கள் மற்றும் அரபு மொழி பேசுபவர்கள் உள்ளதால், மருத்துவமனையில் சிகிச்சைக்காக இருப்பவர்களை அடையாளம் கண்டு மீட்கவும் நடவடிக்கை எடுத்துள்ளதாக இஸ்ரேல் கூறியுள்ளது.

இதுகுறித்து காசாவின் சுகாதார அமைச்சக செய்தித் தொடர்பாளர் கூறுகையில், 'நேற்று அதிகாலை அல்ஷிஃபா மருத்துவமனைக்குள் இஸ்ரேல் ராணுவம் நுழைந்தது. அவர்கள் ஹமாசுக்கு எதிராக தாக்குதல் நடத்தலாம்' என்றார்.

மேலும் அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு கவுன்சில் செய்தித்தொடர்பாளர் ஜான்கிர்பி கூறுகையில், 'ஹமாஸ் மற்றும் பாலஸ்தீனிய இஸ்லாமிய ஜிஹாத் அமைப்பினர் காசா மருத்துவமனைகளுக்குள் ஆயுதங்களை குவித்து வைத்துள்ளனர். அங்கு பிணையக்கைதிகளை வைத்திருப்பதால், அவர்களை மீட்கும் நடவடிக்கையில் இஸ்ரேல் இறங்கியுள்ளது. மருத்துவமனைகளின் அடிப்பகுதியில் சுரங்கப்பாதைகள் இருப்பதால், அங்கும் இஸ்ரேல் ராணுவம் நுழைந்துள்ளதாக தகவல் வந்துள்ளது' என்றார்.

## "காசாவில் குழந்தைகள், பெண்கள் கொலையை நிறுத்துங்கள்"

# அறிவுரை கூறிய ஜஸ்டின் ட்ரூடோ பதிலடி கொடுத்த இஸ்ரேல் பிரதமர்

**டெல் அவிவ் : நவ. 16,**

**காசாவில் குழந்தைகள், பச்சிளம் குழந்தைகள், பெண்கள் கொல்லப்படுவது நிறுத்தப்பட வேண்டும் என்று அறிவுரை வழங்கிய கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுக்கு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு பதிலடி கொடுத்துள்ளார்.**



இது தொடர்பாக பெஞ்சமின்நெதன்யாகுஎக்ஸ் தளத்தில், "பொதுமக்களை குறிவைப்பதற்கு இஸ்ரேலை அல்ல ஹமாஸை தான் குற்றஞ்சாட்ட வேண்டும். அக்டோபர் 7 ஆம் தேதி ஹமாஸ்நடத்தியதாக்குதலில் 1200 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். அவர்கள் இஸ்ரேலுக்குள் நுழைந்து எம்மக்களை தலையைத் துண்டித்தும், எரித்தும் படுகொலை செய்தனர். யூத இன அழிப்புகளிலேயே அண்மைக்காலத்தில் நிகழ்ந்த மிக மோசமான தாக்குதல் இது.

இஸ்ரேல் பொதுமக்களை ஆபத்தில் இருந்து விலக்கிவைக்க எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்கிறது. ஆனால் ஹமாஸ் அப்பாவிப் பொதுமக்களை ஆபத்தின் வழியில் நிறுத்துகிறது. நாங்கள் மனிதாபிமான அடிப்படையில் காசாவில் பாதுகாப்பான வழித்தடங்களை ஏற்படுத்திக் கொடுத்தோம். ஆனால் ஹமாஸ் துப்பாக்கி முனையில் அவர்களைத் தடுக்கிறது. இஸ்ரேல் அல்ல ஹமாஸ் தான் இவற்றுக்கெல்லாம் பொறுப்பாக்கப்பட வேண்டும். அவர்கள் இரட்டை போர்க்குற்றம் புரிந்து கொண்டிருக்கின்றனர். இந்தச் சூழலில் பண்பட்ட நாடுகள் ஹமாஸின் காட்டுமிராண்டித்தனத்தை தோற்கடிக்கும் வகையில் இஸ்ரேலுக்கு ஆதரவாக இருக்க வேண்டும்" என்று கூறியுள்ளார்.

"இஸ்ரேல் அரசு அதிகபட்ச கட்டுப்பாட்டைக் கடைபிடிக்க நான் கோருகிறேன். உலகம் உங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறது. தொலைக்காட்சி, சமூக ஊடகம் வாயிலாக மருத்துவர்கள், குடும்பத்தினர், உயிர் பிழைத்தவர்கள், பெற்றோரை இழந்து தவிக்கும் குழந்தைகளின் சாட்சியங்கள் வந்து சேர்கின்றன. பெண்கள், குழந்தைகள், சிசுக்கள் கொல்லப்படுவதை உலகம் பார்க்கிறது. இது நிறுத்தப்பட வேண்டும்" என்று பதிவிட்டிருந்தார்.

ஏற்கெனவே பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரோனும் இதேபோல் கருத்துக்கூறி பெஞ்சமின் நெதன்யாகுவின் எதிர்வினையை சந்தித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நியூசிலாந்தில் நூற்றாண்டின் பறவை எது தெரியுமா?



**நியூசிலாந்து : நவ. 16,**

**நியூசிலாந்து நாட்டில் சுற்றுச்சூழலை காப்பதில் முன்னணியில் உள்ள காடுகள் மற்றும் பறவைகள் ஆர்வலர்களின் ஃபாரஸ்ட் அண்ட் பர்ட் அமைப்பு, பர்ட் ஆஃப் தி செஞ்சுரி என்ற பெயரில், "நூற்றாண்டிற்கான பறவை" எது என்பதை தேர்ந்தெடுக்க ஒரு போட்டியை நடத்தி வருகிறது. பொதுமக்களில் பலரும், பறவைகள் ஆர்வலர்களும் இதில் பங்கு பெறுவது வழக்கம்.**

இவ்வருடம் சுமார் 200 நாடுகளில் இருந்து பலர் பங்கு பெற்று 3.5 லட்சம் பேர் வாக்களிப்பில் கலந்து கொண்டனர். அதிகம் பேர் பங்கேற்றதால் வாக்களிப்பும், அதன் தொடர்ச்சியாக முடிவுகளும் தாமதமானது. பங்கேற்றவர்களின் முடிவுகளில், இறுதியாக புயூட்கெடெக் எனும் பறவை இந்த நூற்றாண்டிற்கான பறவை என தேர்வானது.

முதலிடம் பெற்ற இப்பறவை, ஆஸ்திரலேசியன் க்ரெஸ்டட் க்ரீப் என்றும் கிரேட் க்ரெஸ்டட் க்ரீப் என்றும் அழைக்கப்படுகிறது. "வாக்களிப்பில் ஆரம்பத்தில் இந்த பறவை பட்டியலில் பின் தங்கியிருந்தது. ஆனால், அதன் பிரத்யேக தோற்றமும், வீட்டில் வளர்ப்பதற்கு ஏற்ற குணாதிசயங்களும் வாக்காளர்கள் மனதில் மாற்றத்தை உண்டாக்கி, இதனை தேர்வு பட்டியலில் மெல்ல மெல்ல முன்னேற்றி இறுதியில் அதற்கே முதலிடம் கிடைத்தது. இப்போட்டியின் மூலமாக இப்பறவை மட்டுமின்றி, அரிதாகி வரும் பல பறவைகள் குறித்து விழிப்புணர்வு மக்களிடையே அதிகரித்துவருகிறது" எனஇந்த போட்டியை நடத்தும் ஃபாரஸ்ட் அண்ட்பர்ட் அமைப்பைசேர்ந்த நிகோலா டோகி தெரிவித்தார்.

புயூட்கெடெக், உணவை அதிகம் உமிழ்ந்து விடும் பழக்கம் கொண்டவை. ஏரிகளில் காணப்படும் பறவை வகைகளை சேர்ந்த புயூட்கெடெக், உலகில் தற்போது 3 ஆயிரத்திற்கும் கீழே உள்ளது. இப்பறவை, பதிவான வாக்குகளில் 2,90,374 வாக்குகளை பெற்று, பிரவுன் கீவி பறவையை இரண்டாம் இடத்துக்கு தள்ளியது. அரிதாகி வரும் இவ்வகை பறவைகளை காக்க பல தன்னார்வலர்கள் நியூசிலாந்தில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# காசாவில் ஹமாஸ் நாடாளுமன்றத்தை கைப்பற்றியது இஸ்ரேல் ராணுவம்

**காசா : நவ. 16,**

**காசாவில் தரைவழியாக முன்னேறும் இஸ்ரேல் ராணுவம் ஹமாஸ் நாடாளுமன்ற கட்டிடத்தை நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை கைப்பற்றியது.**



பாலஸ்தீனத்தின் காசா பகுதியில் உள்ள ஹமாஸ் தீவிரவாதிகள், இஸ்ரேல் மீது கடந்த அக்டோபர் 7-ம் தேதி ராக்கெட் குண்டு வீச்சு தாக்குதலை நடத்தினர். அதன்பின் தரைவழியாகவும், வான் வழியாகவும், இஸ்ரேல் பகுதிக்குள் ஊடுருவிய ஹமாஸ் தீவிரவாதிகள் இஸ்ரேலியர்கள் 1,200 பேரை கண்மூடித்தனமாக சுட்டுக் கொன்றனர். 239 பேரை காசா பகுதிக்குள் கடத்திச் சென்றனர்.

இதனால் இஸ்ரேல் ராணுவம் காசாவின் வட பகுதியில் வான்வழித் தாக்குலில் ஈடுபட்டது. கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக நடந்த தாக்குதலில் காசாவில் 11 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இதனால் காசாவின் வட பகுதியில் சுமார் 15 லட்சம் பேர் இடம் பெயர்ந்து காசாவின் தென் பகுதிகளில் உள்ள நிவாரண முகாம்களில் தங்கியுள்ளனர்.

காசா எல்லையில் பீரங்கி வாகனங்களுடன் காத்திருந்த இஸ்ரேல் ராணுவம், காசாவின் வட பகுதியில் கடந்த மாதம் 27-ம் தேதி ஊடுருவியது. இஸ்ரேல் விமானப்படை ஹமாஸ் தீவிரவாதிகளின் இருப்பிடங்களில் குண்டு மழை பொழிய, இஸ்ரேல் தரைப்படை படிப்படியாக முன்னேறி, ஹமாஸ் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளை கைப்பற்றி வந்தது.

காசாவின் மருத்துவமனைகளில் பதுங்கியிருந்த ஹமாஸ் தீவிரவாதிகளையும் இஸ்ரேல் ராணுவத்தினர் வேட்டையாடினர். காசாவில் உள்ள முக்கிய மருத்துவமனையான அல்-குத் மருத்துவமனைக்கு வெளியே ராக்கெட் லாஞ்சர்களுடன் பாதுகாப்பு பணியில் இருந்த ஹமாஸ் தீவிரவாதிகள் 24 பேரை இஸ்ரேல் ராணுவத்தினர் சுட்டுக் கொன்றனர்.

ஹமாஸ் அமைப்பின் உளவுப்பிரிவுத் தலைவர் காமிஸ் தபாபாஸ், சீனியர் கமாண்டர் தஷின் மஸ்லாம் உட்பட ஹமாஸ் படையின் முக்கிய அதிகாரிகள் அனைவரையும் இஸ்ரேல் ராணுவத்தினர் சுட்டுக் கொன்றனர்.

.ஹமாஸ் கட்டுப்பாட்டில் இருந்த நாடாளுமன்ற கட்டிடத்தையும், இஸ்ரேல் ராணுவத்தினர் கைப்பற்றி உள்ளே புகுந்தனர். காசாவின் வடபகுதியில் ஹமாஸ் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்த அனைத்து முக்கிய பகுதிகளும் இஸ்ரேல் ராணுவத்தின் கட்டுப்பாட்டில் வந்துவிட்டது.

காசா நகரத்தில் உள்ள அல்-ஷிபா மருத்துவமனையில் மின்சாரம், எரிபொருள், குடிநீர், அத்தியாவசிய மருந்துகள் என அனைத்துக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், நோயாளிகள் பெரும் இன்னலுக்கு ஆளாகியுள்ளனர். குறிப்பாக, எடைகுறைந்தகுழந்தைகளை காப்பாற்றுவதற்கு இன்குபேட்டர் வசதி மிகவும் அத்தியாவசியமானதாகும். ஆனால், மின்சாரம் இன்றி அவற்றின் செயல்பாடு முடங்கியுள்ளதால் குழந்தைகளை வெளியில் எடுத்து வைக்கும் அவல நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் ஒவ்வொரு மணி நேரத்துக்கும் குழந்தைகளின் இறப்பு எண்ணிக்கை அதிகரித்து வருவதாக மருத்துவர்கள்வேதனையுடன் தெரிவித்துள்ளனர்.

இதுதவிர, மனிதஉயிர்கள் கொத்து கொத்தாக செத்து மடிவதால் 7 குழந்தைகள் உட்பட 179 உடல்கள் ஒரே இடத்தில் குழிதோண்டி புதைக்கப்பட்டன.

## ஜப்பானில் 1,400 ஆண்டுகள் பழமை

# 2 அணுகுண்டு தாக்குதல்களை தாங்கி கம்பீரமாக நிற்கும் உலகின் பழமையான நிறுவனம்

**ஜப்பான் : நவ. 16,**

**ஜப்பானில் 14 நூற்றாண்டுகள் பழமையான ஒரு நிறுவனம் இருக்கிறது. அந்த நிறுவனத்தின் பெயர் "கோங்கோ குமி", 1445 ஆம் ஆண்டு கட்டப்பட்ட இந்த நிறுவனத்தின் கட்டிடம் இரண்டு அணுகுண்டு தாக்குதல்களுக்கு பிறகும் சிதையாமல் கம்பீரமாக நின்றுக்கொண்டிருக்கிறது.**



கொரியாவை சேர்ந்த கட்டுமான தொழிலாளரான ஷிகெமிட்சு கோங்கோவால் நிறுவப்பட்ட இந்த நிறுவனம், கோயில் கட்டுமானங்களுக்கு பெயர் போனது. ஜப்பானில் புத்தர் கோயில் கட்டுவதற்கு இளவரசர் ஷோடோகு, கோங்கோவைதான் அழைத்தார். இரண்டாம் உலக போரின் போதுஜப்பானைநிலைகுளைய வைத்த இரண்டு அணுகுண்டு தாக்குதல்கள், இயற்கை பேரழிவுகள் ஆகிவற்றை தாங்கி நிற்கும் உலகின் பழமையான நிறுவனமாக இது கருதப்படுகிறது.

கோங்கோ குமி 1,4000 ஆண்டுகளுக்கும் மேலாக ஒருகுடும்பத்தால்நடத்தப்படும் கட்டுமானநிறுவனமாகும். இதன் தலைமையகம் ஒசாகாவில் உள்ளது. 17 ஆம் நூற்றாண்டில் தொடங்கப்பட்ட இந்தநிறுவனம் 40தலைமுறைகளையும்தாண்டி வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது.


கோங்கோ குமியின் வழக்கப்படி மருமகன்கள் குடும்பத்தின் பெயரை ஏற்றுக்கொள்வது பாரம்பரியம். ஜப்பானில் இந்த கலாச்சாரம் பரவலாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. கோங்கோ குடும்பத்தில்மகன்கள்இல்லாத போதிலும் மகள்கள் அல்லது மருமகன்களால் இந்த நீண்ட பாரம்பரியம் இன்றுவரை காப்பாற்றப்பட்டு வருகிறது.

16 ஆம் நூற்றாண்டில் இருந்து, புகழ்பெற்ற ஒசாகா கோட்டை உள்ளிட்ட சிறந்த கட்டிடகளைகளுக்கு பெயர் போனாதாக விளங்குகிறது கோங்கோ குமி நிறுவனம். வரலாற்று சிறப்புமிக்க கோட்டைகள், கோயில்கள், சிற்பங்கள் உள்ளிட்டவற்றை கட்டுவது, சீரமைப்பது, புதுப்பிப்பது உள்ளிட்ட பணிகளை செய்து வருகிறது.

கோங்கு குமி பாரம்பரிய கட்டுமான கலைகளில் கவனம் செலுத்தி வந்தாலும் பெரிய கட்டுமான நிறுவனக்களின் போட்டியால் கடந்த 2006 ஆண்டு தகாமட்சு கட்டுமான குழுவின் ஒரு பகுதியாக மாறியது. 2005 ஆண்டு புத்தர் கோயில்கட்டுமானபணியில் 7.5 பில்லியன் ஆண்டு வருமானம் கொண்டகட்டுமானநிறுவனமாக திகழ்ந்தது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவில் ‘அபெக்’ உச்சி மாநாடு ஜோ பிடன் ஜி ஜின்பிங் சந்திப்பு

## சர்வதேச விவகாரங்கள் குறித்து ஆலோசனை



**கலிபோர்னியா : நவ. 16,**

**அமெரிக்காவில் நடந்த ‘அபெக்’ உச்சிமாநாட்டில்ஜோ பிடன் ஜி ஜின்பிங் சந்திப்பு நடந்தது. அவர்கள் சர்வதேச விவகாரங்கள் குறித்து ஆலோசனை நடத்தினர்.**

அமெரிக்கா சென்றுள்ள மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ்கோயல், கலிபோர்னியா மாகாணத்தில் அமைந்துள்ள டெஸ்லா தயாரிப்பு ஆலையை பார்வையிட்டார். ஆனால் உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டிருந்த அந்த நிறுவனத்தின் தலைவரான எலான் மஸ்க், மத்திய அமைச்சர் பியூஷ் கோயலை நேரில் சந்திக்க முடியாமல் போனது குறித்து வருத்தம் தெரிவித்துள்ளார்.

அதன்பின் இந்தோ-பசிபிக் பொருளாதாரக் கூட்டமைப்பு நாடுகளின் அமைச்சர்கள் கூட்டத்தில் இந்தியாவின் சார்பில் மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல் கலந்து கொண்டுபேசினார். தொடர்ந்து சான்பிரான்சிஸ்கோவில் நேற்றுநடந்த ‘ஏபிஇசி’ (அபெக்) பொருளாதார உச்சிநாடுகளின் தலைவர்கள் கூட்டத்தில் சீன அதிபர் ஜி ஜின்பிங்கும், அமெரிக்க அதிபர் ஜோபிடனும் சந்தித்துக் கொண்டனர். இந்த சந்திப்பால் அமெரிக்க சீனா இடையிலான உறவுமேம்படும் என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

இரு தலைவர்களும் ரஷ்யா உக்ரைன் போர், இஸ்ரேல் ஹமாஸ் போர் குறித்தும், சர்வதேச விவகாரங்கள் குறித்தும் ஆலோசனை நடத்தினர். முன்னதாக அமெரிக்க அதிபர் ஜோபிடன் அளித்த பேட்டியில், ‘சிக்கலான நேரங்களில் அவருடன் (ஜி ஜின்பிங்) தொலைபேசியில் பேசமுடியும். அவரும் என்னுடன் பேச முடியும். அமெரிக்க ராணுவ மட்டத்திலும் ஒருவரோடு ஒருவர் தொடர்பில் உள்ளனர்’ என்றார்.

# அமெரிக்காவில் பெண்ணுக்கு ஆச்சரிய நிகழ்வு இரண்டு கருப்பைகள், இரண்டிலும் கர்ப்பம்

**அலபாமா : நவ. 16,**

**அமெரிக்காவில் இரண்டு கருப்பைகளுடன் பிறந்த ஒரு பெண் ஒரே நேரத்தில் இரண்டிலும் கர்ப்பம் தரித்துள்ள அரிய சம்பவம் நிகழ்ந்துள்ளது.**

அமெரிக்காவின் அலபாமா மாகாணத்தில் கெல்சி ஹேட்சர் என்ற பெண், இரண்டுகருப்பைகள்கொண்ட பெண்ணாக இருக்கிறார். அதைவிட அதிசயம், அந்த இரண்டு கருப்பையிலும் தனித்தனி குழந்தைகளை சுமந்து கொண்டு இருப்பது கண்டறியப்பட்டது. மருத்துவ வரலாற்றில் இது ஒரு அரிய நிகழ்வாக பார்க்கப்படுகிறது.

கெல்சி மற்றும் அவரது கணவர், காலேப் இதை கடவுளின் ஆசிர்வாதமாக கருதுகின்றனர். இவர்களுக்கு ஏற்கெனவே ஏழு, நான்கு மற்றும் இரண்டு வயதில் மூன்றுகுழந்தைகள்உள்ளனர். வரும் கிறிஸ்துமஸுக்கு இந்த இரண்டு குழந்தைகளும் பிறக்கவுள்ளன. ஆனால், ஒவ்வொரு கருப்பையும் வெவ்வேறு நேரங்களில் சுருங்கக்கூடும் என்பதால், குழந்தைகள் மணிநேரம், நாட்கள் அல்லது வாரங்கள் இடைவெளியில் பிறக்கலாம் என்று மருத்துவர்கள் நம்புகிறார்கள்.

கெல்சி தனது கணவரிடம் தன் வயிற்றில் இரண்டு கரு வளர்கிறது என்று சொன்னபோது அதை அவர் நம்பவில்லை. ஆனால் அதை மருத்துவர்கள் உறுதி செய்தபோது அவர் ஆச்சரியம் அடைந்தார். தற்போது தன் மனைவியை மிக கவனமாக பாதுகாத்து வருகிறார்.

பெண் கரு உருவாகும்போது, கருப்பை இரண்டு சிறிய குழாய்களை உருவாக்குகிறது. அது வளரும்போது, குழாய்கள் ஒன்றாக இணைந்து கருப்பையை உருவாக்குகின்றன. சில நேரங்களில்குழாய்கள்சரியாக இணைவதில்லை. அதற்கு பதிலாக இரண்டும் தனித்தனி உறுப்புகளாக உருவாகின்றன. இது இரட்டை கருப்பையாகும்.

இந்தவழியில் உருவாகும் கருப்பை பொதுவாக கருப்பை வாயையோனிக்குள் திறக்கும். இந்த திறப்பு கருப்பை வாய் என்று அழைக்கப்படுகிறது. மற்ற சமயங்களில், ஒவ்வொரு



கருப்பைக்கும் அதன் சொந்த கருப்பை வாய் இருக்கும்.


இந்த வகை இரட்டை கருப்பை உள்ள பெண்களில், கர்ப்பமும் நன்றாக வளரும். ஆனால்சில சந்தர்ப்பங்களில், கருச்சிதைவு மற்றும் முன்கூட்டியே பிறப்பு ஏற்படுகிறது. ஒவ்வொரு ஆயிரம் பெண்களில் மூன்று பேருக்கு இரட்டை கருப்பை காணப்படுகிறது.

கெல்சியின் உடல்நிலை குறித்த அறிவிப்பு சமூக வலைதளங்களில் வைரலாக பரவியது. இதனை அறிந்த நெட்டிசன்கள்பலரும்அதிர்ச்சி அடைந்துள்ளனர். இதுபோன்ற சம்பவத்தை நாங்கள் கேட்பது இதுவே முதல் முறை என்கிறார்கள்.

# சாலையில் சென்ற காரின் மீது மோதிய விமானம்

**டெக்ஸாஸ் : நவ. 16,**

**அமெரிக்காவில் சாலையில் சென்ற காரின் மீது விமானம் மோதியதில் கார் ஓட்டுநர் காயமடைந்தார்.**



அமெரிக்காவில் டெக்ஸாஸில் உள்ள மிட்லேண்ட் என்ற இடத்தில் இருந்து டல்லஸ் நோக்கி சிறிய ரக விமானம் பறந்து கொண்டிருந்தது. அப்போது திடீரென அதன் எஞ்சினில் கோளாறு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, விமானி டல்லஸ் புறநகர் பகுதியில் உள்ள விமான நிலையத்தில் அவசரமாக விமானத்தை தரையிறக்க முயன்றார்.

அப்போது அதிவேகமாக வந்த விமானம் ஓடுபாதையில் இருந்து விலகியது. அப்போது விமான நிலையை எல்லையை ஒட்டி அமைக்கப்பட்டிருந்த வேலியை உடைத்துக் கொண்டு சாலையின் பக்கம் திரும்பியது. அப்போது, விமானத்தின் சக்கரம் கழன்று விழுந்தது.


இதனால், தரையில் தாறுமாறாக சறுக்கியபடி சென்ற விமானம். சாலையில் வந்து கொண்டிருந்த காருடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது. இதனைக் கண்ட விமான நிலைய அதிகாரிகள் விரைந்து சென்று, இந்த விபத்தில் காயமடைந்த கார் ஓட்டுநர் மற்றும் விமானி ஆகியோரை மீட்டு உடனடியாக மருத்துவமனையில் அனுமதித்தனர்.

இந்த விபத்துக்கான காரணம் குறித்து விசாரித்து வருவதாக விமானப் போக்குவரத்துத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். விமானமும், காரும் மோதி விபத்துக்குள்ளான வீடியோ காட்சி தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

# கழிவு நீரை எரிபொருளாக மாற்றும் சாதனம் ஆராய்ச்சியாளர்களின் அசத்தல் கண்டுபிடிப்பு

**லண்டன் : நவ. 16,**

**ஒரே நேரத்தில் இரண்டு பிரச்சினைகளுக்கு தீர்வு காண இந்த சாதனம் உதவும் என ஆராய்ச்சியாளர்கள் நம்புகிறார்கள்.**



அசுத்தமான நீர் அல்லது கடல்நீரை சுத்தமான ஹைட்ரஜன்எரிபொருளாகவும், சுத்திகரிக்கப்பட்ட நீராகவும் மாற்றக்கூடிய புதிய சாதனத்தை இங்கிலாந்தின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர். சூரிய சக்தியால் இயங்கும் இந்த சாதனம், மிதக்கும் செயற்கை இலைஎனஅழைக்கப்படுகிறது. தாவரங்கள் சூரிய ஒளியை உணவாக மாற்றும் ஒளிச்சேர்க்கையின் அடிப்படையில் இந்த சாதனத்தை உருவாக்கியிருக்கிறார்கள்.

இந்த எளிய சாதனம், அடிப்படை வளங்கள் இல்லாத பகுதிகள் மற்றும் தொலைதூர பகுதிகளுக்கு பயனுள்ளதாக இருக்கும் என ஆராய்ச்சியாளர்கள் கூறி உள்ளனர். மேலும், சுத்தமான எரிபொருள் மற்றும் நீர் கிடைப்பதற்கான தீர்வுகளுக்கு இது ஒரு உதாரணமாக அமையும் என்றும் கூறுகின்றனர்.

இதற்கு முன்பு கண்டுபிடித்த ‘செயற்கை இலை’ சாதனத்திற்குசுத்தமான நீர் ஆதாரங்கள் தேவை. இப்போது கண்டுபிடித்துள்ள புதியசாதனத்தை அசுத்தமான தண்ணீரில் பயன்படுத்தலாம். அத்துடன், அந்த தண்ணீரை சுத்திகரித்துசுத்தமானகுடிநீரை உற்பத்தி செய்ய முடியும். எனவே, ஒரேநேரத்தில் இரண்டு பிரச்சினைகளுக்கு தீர்வு காண இந்த சாதனம் உதவும் என ஆராய்ச்சியாளர்கள் நம்புகிறார்கள்.



# அதிமுகவின் லோகோ வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் இன்று விசாரணை

# மறைந்த கம்யூனிஸ்டு கட்சியின் மூத்த தலைவர் சங்கரய்யா உடலுக்கு அரசு மரியாதை





# ஜம்மு காஷ்மீரில் பேருந்து விபத்து 36 பேர் உயிரிழப்பு: மீட்பு பணிகள் தீவிரம்


| சென்னை / புதுக்கோட்டை | 16.11.2023 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை வரலாறு நாளிதழ்

புதுகை

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

அம்பிகா , தென்னிந்தியத் திரைப்பட நடிகை (பி.1962)



வக்கார் யூனிசு , பாக்கிஸ்தானியத் துடுப்பாளர் (பி.1971)



ஆதித்யா ராய் கபூர் , இந்தித் திரைப்பட நடிகர் (பி.1985)



ரங்கராஜ் பாண்டே , ஊடகவியலாளர் (பி.1975)



## இன்றைய நினைவு நாள்

ஊமைத்துரை , இந்திய விடுதலைப் போராட்ட வீரர், வீரபாண்டிய கட்டபொம்மனின் தம்பி (இ.1801)



பாரதி மணி , தமிழக எழுத்தாளர், நடிகர் (பி.1937) (இ.2021)



## உலக சகிப்புத் தன்மை நாள்